முழுப் பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை – 2024

# 28 - அரசியல் விஞ்ஞானம்

## புள்ளியிடும் திட்டம்

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

சுட்டெண் : .................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாத்தாள் **A, B** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி **A** பல்தேர்வு வினாக்கள் **30** இனையும் பகுதி **B** குறு வினாக்கள் **20** இனையும் கொண்டுள்ளன.
- சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 1 - 3 | |
| 2 | 4 - 11 | |
| 3 | 12 - 17 | |
| 4 | 18 - 24 | |
| 5 | 25 - 30 | |
| 6 | 31 - ~~41~~ 37 | |
| 7 | 38 - 45 ~~42 - 50~~ | |
| 8 | 46 - 50 ~~மொத்தம்~~ | |
| Total | | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி A

- **1** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து, அந்த இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**1.** பின்வருவனவற்றுள் அரசியல் விஞ்ஞான பாடத்தினுள் உள்ளடங்குவது யாது?
(1) ஒழுங்கமைப்பு நடத்தை
(2) இறையியல்
(3) மானிட பரிணாம வளர்ச்சி
(4) மொழி மற்றும் கலாசாரம்
(5) ஒப்பீட்டு அரசாங்கம் (......)

**2.** அரசியல் விஞ்ஞானத்துக்கான தத்துவார்த்த அணுகுமுறையானது
(1) அரசியல் கற்கைகளுக்கான புதியதொரு அணுகுமுறையாகும்.
(2) ஹெரல்ட் லாஸ்வெல் மற்றும் டேவிட் ஈஸ்டன் ஆகியோரால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.
(3) அரிஸ்டோட்டலினால் நிராகரிக்கப்பட்டதாகும்.
(4) முக்கிய அரசியல் எண்ணக்கருக்கள் தொடர்பான நெறிமுறைசார் விளக்கத்தினை வழங்குகின்றது.
(5) அரசியல் கற்கைக்கு அனுபவரீதியான பரிசீலனை முறைகளை அறிமுகம் செய்தது. (......)

**3.** நவீன அரசு
(1) 17 ஆம் மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் ஆசியாவில் தோற்றம் பெற்றது.
(2) சட்ட மற்றும் நிறைவேற்றுப் பணிகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.
(3) உலகமயமாதல் காரணமாகத் தோன்றும் சவால்களை எதிர்கொள்கின்றது.
(4) நிலவுடைமை வகுப்பினரின் நலன்களைப் பிரதிபலிக்கின்றது.
(5) நெகிழ்ச்சித் தன்மை கொண்ட ஆள்புலத்தினை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. (......)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**4.** அரசாங்கம்
(1) உள்ளக இறைமையினைக் கொண்டுள்ளது.
(2) ஒரு நிரந்தர நிறுவனமாகும்.
(3) ஒட்டுமொத்த சமூகத்திற்குமான தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளது.
(4) முதன்முதலில் 18 ஆம் நூற்றாண்டில் ஆசியாவில் தோற்றம் பெற்றது.
(5) ஏனைய அனைத்து நிறுவனங்களை விடவும் மேலானது. (......)

**5.** ஜனாதிபதி அரசாங்க முறையின் பிரதான பண்புகளில் ஒன்றாவது
(1) கூட்டு அரசியல் நிறைவேற்றுத்துறையினைக் கொண்டிருத்தல்.
(2) அரசாங்கம் சட்டத்துறைக்குப் பொறுப்புக் கூறுதல்.
(3) அரசாங்கத்தின் தலைவர் மற்றும் அரசின் தலைவர் வெவ்வேறாகக் காணப்படுதல்.
(4) அரசாங்கம் சட்டத்துறையின் நம்பிக்கையில் தங்கியிருத்தல்.
(5) நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியின் கைகளில் குவிந்து காணப்படுதல். (......)

**6.** தாராண்மை வாத கருத்தியலின் சில முக்கிய சிந்தனையாளர்களில் அடங்குவோர்
(1) ஜெரமி பெந்தம், ஜோன் ஸ்டுவட் மில் மற்றும் அடம் ஸ்மித் போன்றோராவர்.
(2) தோமஸ் ஹொப்ஸ், எட்மன்ட் பேர்க் மற்றும் ரொபட் நோசிக் போன்றோராவர்.
(3) ஜீன் ஜெக் ரூசோ, வூட்ரோ வில்சன் மற்றும் மகாத்மா காந்தி போன்றோராவர்.
(4) ரொபர்ட் ஓவன், கார்ல் மார்க்ஸ் மற்றும் விலாடிமீர் லெனின் போன்றோராவர்.
(5) மேரி வொல்ஸ்டன்க்ராப்ட், பெட்டி ப்ரிடன் மற்றும் கேட் மிலேட் போன்றோராவர். (......)

**7.** தாராள ஜனநாயக ஆட்சியொன்றில்
(1) அரசுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான வேறுபாடு தெளிவற்றதாகக் காணப்படும்.
(2) நீதித்துறை நிறைவேற்றுத்துறையின் ஒரு பிரிவாகக் கருதப்படுகின்றது.
(3) தனிநபர் சுதந்திரம் மற்றும் உரிமைகள் மதிக்கப்படுகின்றன.
(4) பிரஜைகளின் தேர்தல் அரசியல் பங்கேற்பு அதைரியப்படுத்தப்படுகின்றது.
(5) ஆட்சியாளர்கள் மக்களுக்குப் பொறுப்புக்கூறுவதில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்கள். (......)

**8.** பின்வரும் அரசியல் சிந்தனையாளர்களுள் "முதலாளித்துவ சமூக மற்றும் பொருளாதார முறைமை ஊழியச் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளது" என்ற கருத்தினை முன்வைத்தவர் யார்?
(1) கார்ல் மாக்ஸ் (2) ஜோன் லொக் (3) A. V. டைசி
(4) ஜீன் போடின் (Jean Bodin) (5) மொன்டஸ்கியு (......)

**9.** சமூக ஜனநாயகம்
(1) பாராளுமன்ற ஜனநாயகத்தினை அதைரியப்படுத்துகின்றது.
(2) சோசலிச சிந்தனையினை மாத்திரம் வலியுறுத்துகின்றது.
(3) சமூக நலவாதத்தை ஆதரிக்கின்றது.
(4) சோசலிசத்தை அடைவதற்கு புரட்சிகரப் பாதையினை ஊக்குவிக்கின்றது.
(5) பொருளாதாரத்தில் அரசின் தலையீட்டினைத் தடுக்கின்றது. (......)

**10.** பெண்ணியவாதம்
(1) சமூகத்தில் நிலவும் பால்நிலைப் பாகுபாடுகளை அனுமதிக்கின்றது.
(2) பெண்கள் ஆண்களை விட மேலானவர்கள் என்பதனை வலியுறுத்துகின்றது.
(3) பெண்கள் குடும்ப விவகாரங்களை மாத்திரம் நிறைவேற்றுவதை ஆதரிக்கின்றது.
(4) பெண்களின் அரசியல் பங்கேற்பினை அதைரியப்படுத்துகின்றது.
(5) ஆணாதிக்க நிறுவனங்களை விமர்சிக்கின்றது. (......)

**11.** சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்துவதற்கு அவசியமான நிபந்தனைகளுள் ஒன்றாக அமைவது
(1) ஆதிக்க மிகு தனிக் கட்சி முறை காணப்படுதல்.
(2) தனி அங்கத்தவர் தேர்தல் தொகுதி முறை காணப்படுதல்.
(3) பலமான பொலிஸ் மற்றும் இராணுவம் காணப்படுதல்.
(4) துடிப்பான சமூக ஊடகம் காணப்படுதல்.
(5) தேர்தலை நடாத்துவதற்கு சுதந்திரமான மற்றும் அதிகாரமிக்க நிறுவனமொன்று காணப்படுதல். (......)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**12.** கீழே தரப்பட்டுள்ள எண்ணக்கருக்களுக்கான விளக்கங்களில் ஒன்று மாத்திரமே சரியானது. சரியான விளக்கத்துடன் பொருந்தும் எண்ணக்கருவினைத் தெரிவுசெய்க.

(1) தேசம் : ஒரு பொதுவான மொழி, மதம், மரபுகள் மற்றும் கலாசாரத்தினை உரித்தாகக் கொண்டு தம்மைத் தாமே தனித்துவமான அரசியல் சமூகமாக அடையாளப்படுத்திக் கொள்ளும் ஒரு மக்கள் குழுவாகும்.

(2) அமுக்கக் குழுக்கள் : பொது அபிலாசைகள் மற்றும் உயர் மட்ட அரசியல் பற்றுறுதியினால் தனித்து விளங்கும் ஒரு பெரும் குழுவினராகும்.

(3) சமூக இயக்கங்கள் : அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளின் மீது அழுத்தத்தை பிரயோகிக்கும் நோக்குடன் செயற்படும் பொது மக்களின் முறைசார் ஒழுங்கமைப்புகளாகும்.

(4) சிவில் சமூகம் : அரசாங்க அதிகாரத்தை வெற்றிகொள்ளும் நோக்குடன் ஒழுங்கமைந்த மக்கள் குழுக்களாகும்.

(5) அரசியல் கட்சி : அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படும் பிரஜைகளின் ஒரு சுயாதீன அமைப்பாகும். (……)

**13.** கூட்டுச் சமஷ்டி (confederation) ஒன்றில்

(1) பிராந்திய அரசாங்கங்களுக்கிடையில் (சமஷ்டி அலகுகளுக்கிடையில்) பலமான உறவு பேணப்படும்.

(2) மத்தி தனது அதிகாரங்களைத் தானே தீர்மானிக்கும்.

(3) மத்திக்கும் பிராந்திய அரசாங்கங்களுக்குமிடையில் இறைமை அதிகாரம் பகிரப்பட்டிருக்கும்.

(4) மத்தியினை விட பிராந்திய அரசாங்கங்கள் பலம் மிக்கனவாகக் காணப்படும்.

(5) பல்வேறு தேசிய ரீதியிலான விடயங்கள் தொடர்பான அதிகாரங்களை மத்தி கொண்டிருக்கும். (……)

**14.** ஐக்கிய அமெரிக்காவின் செனட் சபை

(1) 50 மாநிலங்களில் ஒவ்வொரு மாநிலங்களில் இருந்தும் தலா மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு இடமளிக்கிறது.

(2) உலகில் காணப்படும் மிகவும் பலமான இரண்டாம் மன்றமாகக் கருதப்படுகின்றது.

(3) அரசியலமைப்புரீதியாக சனப்பிரதிநிதிகள் சபைக்குக் கீழானதாகும்.

(4) சனப்பிரதிநிதிகள் சபையால் நிறைவேற்றப்படும் மசோதாக்களை ஒரு வருடம் வரை தாமதப்படுத்தும் அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.

(5) ஜனாதிபதி மேற்கொள்ளும் ஒப்பந்தங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பதில்லை. (……)

**15.** பின்வருவனவற்றுள் உரிய நாட்டினையும் அதன் அரசாங்க முறையின் பண்பினையும் சரியாக விபரிக்கும் கூற்றினைத் தெரிவுசெய்க.

(1) ஐக்கிய அமெரிக்கா : நான்கு வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் தேர்தலின் ஊடாக ஜனாதிபதியும் உப ஜனாதிபதியும் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

(2) இந்தியா : அமைச்சரவை அரசாங்க முறை 19 ஆம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்தது.

(3) பிரான்ஸ் : ஒவ்வொரு சட்டசபைத் தேர்தலுக்குப் பின்னரும் தேசிய சபையினால் ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுகின்றார்.

(4) பிரித்தானியா : முடியாட்சியற்ற பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையினைக் கொண்டுள்ளது.

(5) சுவிட்சர்லாந்து : பாராளுமன்றத்தால் தெரிவுசெய்யப்படுகின்ற அமைச்சரவை நிறைவேற்றுத்துறையாகச் செயற்படுகின்றது. (……)

**16.** பொதுக் கொள்கையினை அமுல்படுத்தும் நிறுவனமாவது

(1) அரசியல் கட்சிகளாகும்.

(2) நலன்பேண் குழுக்களாகும்.

(3) கொள்கைப் பிரசாரக் குழுக்களாகும் (advocacy groups).

(4) நிரந்தர நிறைவேற்றுத்துறையாகும்.

(5) சமூக இயக்கங்களாகும். (……)

**17.** சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை வடிவமைத்த பிரதான காரணியில் அடங்குவது

(1) குடும்ப அரசியல் (dynastic politics)

(2) பொதுஜன அபிப்பிராயம்

(3) தேர்தல் வாக்குறுதிகள்

(4) சார்க் அங்கத்துவம்

(5) ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் கொள்கைகள் (……)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**18.** மோதல் வாழ்க்கைச் சக்கரம் (வட்டம்) குறிப்பிடுவதன் படி
(1) மோதல் ஒரு முடிவில்லா செயன்முறையாகும்.
(2) மோதல் மாறாத்தன்மை கொண்டதாகும்.
(3) மோதல்கள் ஒரு போதும் அமைதி வழியில் முடிவுறுவதில்லை.
(4) மோதல் ஒரு இயங்குதன்மை கொண்ட செயன்முறையாகும்.
(5) மோதல்கள் எப்போதும் இரு தரப்பும் வெற்றிபெறும் (win - win) தீர்வினையே தரும். (......)

**19.** வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான நிர்ப்பந்த (பலவந்த) வழிமுறைகளில் அடங்குவது
(1) இராஜதந்திர பேச்சுவார்த்தை (2) வெளிநாட்டு உதவி
(3) பொருளாதார உடன்படிக்கைகள் (4) பொருளாதாரத் தடை
(5) கலாசார இராஜதந்திரம் (......)

**20.** 1648 ஆம் ஆண்டு வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கை
(1) சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பினைப் பேணுவதற்காக சர்வதேச சங்கத்தைத் (League of Nations) தாபித்தது.
(2) உடன்படிக்கையில் கைபெழுத்திட்ட அரசுகளின் ஆள்புல எல்லைகளை வரையறை செய்தது.
(3) ஐரோப்பிய வல்லரசுகளின் காலனித்துவ ஆட்சியினை முடிவுக்குக் கொண்டு வந்தது.
(4) அரசின் இறைமை அதிகாரத்தைப் புறக்கணித்தது.
(5) ஐரோப்பாவில் மதச் சுதந்திரத்தினை மட்டுப்படுத்தியது. (......)

● **21** தொடக்கம் **25** வரையிலான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இருந்து **சரியான கூற்றுத் தொகுதியினைக்** கொண்ட விடையினைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

**21.** காலனித்துவ இலங்கைக்கு கோல்புருக் - கமரன் ஆணைக்குழு பரிந்துரைத்தவற்றுள் அடங்குவது
A - அரசு தலையிடா பொருளாதார முறைமை
B - பொதுவான நீதித்துறைக் கட்டமைப்பு ஒன்றினை ஸ்தாபித்தல்
C - அரசாங்கத்தால் நடாத்தப்பட்ட சுதேசக் கல்வியினைப் புகட்டிய சகல பாடசாலைகளையும் இல்லாதொழித்தல்.
D - வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட அரசாங்கம்.
E - ஒருமுகப்படுத்தப்பட்ட அரசாங்க முறைமை ஒன்றைத் தாபித்தல்.
(1) A B C D (2) A B C E (3) A B D E (4) A C D E (5) B C D E (......)

**22.** 1910 தொடக்கம் 1930 வரை அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்களின் கீழ்
A - சட்டசபை படிப்படியாக அதனுடைய அதிகாரத்தினை விஸ்தரித்துக் கொண்டது.
B - ஆளுனரின் அதிகாரங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டது.
C - வரையறுக்கப்பட்ட வாக்குரிமையுடன் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் தத்துவம் அறிமுகம் செய்யப்பட்டது.
D - அரசியலமைப்பின் கட்டமைப்புக்குள் தீவிர மாற்றங்கள் செய்யப்பட்டன.
E - உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.
(1) A B C D (2) A B C E (3) A B D E (4) A C D E (5) B C D E (......)

**23.** 1947 / 1948 சோல்பரி அரசியலமைப்பின் கீழ்
A - செனட் சபையின் சகல உறுப்பினர்களினதும் பதவிக்காலம் ஒரே நேரத்தில் முடிவுறவில்லை.
B - மகா தேசாதிபதியின் பதவிக்காலம் திட்டவட்டமான காலப்பகுதிக்கு வரையறுக்கப்பட்டிருக்கவில்லை.
C - மகா தேசாதிபதியின் செயற்பாடுகளை எந்த ஒரு நீதிமன்றிலும் சவாலுக்குட்படுத்த முடியாதிருந்தது.
D - அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்புத் தத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
E - ஒவ்வொரு அமைச்சரும் தமது அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பாக தனித்தனியாகப் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டிருந்தனர்.
(1) A B C D (2) A B C E (3) A B D E (4) A C D E (5) B C D E (......)

**24.** 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பு
A - அதிகார வேறாக்கத் தத்துவத்தைப் புறக்கணித்தது.
B - பிறிவி கவுன்சிலின் (கோமறைக் கழகத்தின்) நீதிக்குழுவுக்கு முறைப்பாடு செய்யும் உரிமையினை இல்லாதொழித்தது.
C - அரசின் ஒற்றையாட்சி இயல்பினை ஏற்று அங்கீகரித்தது.
D - ஜனாதிபதியை அவரது சகல பதவி நிலைசார் செயற்பாடுகளுக்கும் தேசிய அரசுப் பேரவைக்குப் பொறுப்புக்கூறச் செய்தது.
E - சுயாதீனப் பொதுச்சேவை என்ற எண்ணக்கருவினை நிராகரித்தது.
(1) A B C D (2) A B C E (3) A B D E (4) A C D E (5) B C D E (......)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**25.** 1978 ஆம் ஆண்டு மூல அரசியலமைப்பிற்கிணங்க ஜனாதிபதியானவர்

A - பிரதமரைப் பதவியில் இருந்து நீக்கவும் அமைச்சரவையினை மறுசீரமைக்கவும் அதிகாரத்தினைக் கொண்டிருந்தார்.

B - பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டிருக்கவில்லை.

C - ஐந்து வருட பதவிக்காலத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

D - அனைத்து முக்கிய பதவிகளுக்குமான ஆட்களைத் தனது தற்றுணிவின் பெயரில் நியமித்தார்.

E - பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட மசோதா ஒன்றினை மக்கள் தீர்ப்புக்கு விடும் அதிகாரத்தினைக் கொண்டிருந்தார்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

- **26** தொடக்கம் **30** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து பின்வரும் இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடையின் இலக்கத்தினைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விவரிக்கின்றது. |

1977 /09/08 - திருத்தம் - 02

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று | |
|---|---|---|---|
| **26.** | 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு 1977 ஆம் ஆண்டு மேற்கொண்ட திருத்தத்தின் மூலம் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை உருவாக்கப்பட்டது. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பினை அறிமுகம் செய்ததன் மூலம் ஜனாதிபதி முறைமைக்குப் பொருந்தும் வகையில் ஒட்டுமொத்த அரசியலமைப்புக் கட்டமைப்பும் மாற்றியமைக்கப்பட்டது. | (......) |
| **27.** | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கிணங்க ஜனாதிபதியின் பதவி வெற்றிடமாகுமாயின் பாராளுமன்றம் அதன் உறுப்பினர்களில் ஒருவரை எஞ்சிய பதவிக்காலத்துக்கு ஜனாதிபதியாகப் பதவி வகிக்கத் தெரிவுசெய்ய வேண்டும். | ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படும் நபர் பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மை வாக்கினைப் பெறுவது அவசியமாகும். | (......) |
| **28.** | 1987 ஆம் ஆண்டு இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட மாகாணசபை முறைமை நாட்டின் பொதுச் சேவையில் ஒரு பாரிய மாற்றத்தினைக் கொண்டுவந்தது. | மாகாண பொதுச் சேவைகளின் (பொது நிர்வாகத்தின்) பிரதானி முதலமைச்சர் ஆவார். | (......) |
| **29.** | இலங்கையில் விருப்பு வாக்கு முறை 1978 ஆம் ஆண்டு மூல அரசியலமைப்பின் ஊடாக அறிமுகம் செய்யப்பட்டது. | பாராளுமன்றத் தேர்தலில் வாக்காளர் ஒருவர் ஒரே கட்சியினைச் சேர்ந்த மூன்று வேட்பாளர்களுக்குத் தமது மூன்று விருப்பு வாக்குகளை வழங்க முடியும். | (......) |
| **30.** | 1956 - 1977 வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் கட்சி அரசியல் இரு கட்சி முறைப் பண்பினைக் கொண்டிருந்தது. | 1989 தொடக்கம் இலங்கையின் அரசியல் கட்சி முறைமை பலகட்சி முறைமையினை நோக்கி நகர்ந்துள்ளது. | (......) |



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
**අ.පො.ස. (උ.පෙළ) විභාගය** / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2024

**විෂය අංකය** / **பாட இலக்கம்**: **23**

**විෂයය** / **பாடம்**: **அரசியல் விஞ்ஞானம்**

**ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்**

I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 5 | 21. | 3 |
| 02. | 4 | 12. | 1 | 22. | 2 |
| 03. | 3 | 13. | 4 | 23. | 2 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 4 |
| 05. | 5 | 15. | 1 | 25. | 3 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 1 |
| 07. | 3 | 17. | 5 | 27. | 5 |
| 08. | 1 | 18. | 4 | 28. | 2 |
| 09. | 3 | 19. | 4 | 29. | 3 |
| 10. | 5 | 20. | 2 | 30. | 4 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :
එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு ලකුණු 02 බැගින් / 02 புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 2 × 30 = 60


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி B

**31.** வரலாற்றுரீதியான பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் அரசுகளை பல்வேறு வகைகளாக அல்லது மாதிரிகளாக வகைப்படுத்த முடியும். அவற்றுள் **இரண்டைப்** பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**32.** (1) அரசு நிர்மாண மோதல் (the state formation conflict) குறித்து எழுதியுள்ள அறிஞர் ஒருவரின் பெயரைக் குறிப்பிடுக.

..............................................................................................................

(2) 'நிலையான சமாதானம்' எனும் எண்ணக்கருவை அறிமுகம் செய்த அறிஞரின் பெயரைக் குறிப்பிடுக.

..............................................................................................................

**33.** பின்வரும் நூல்களின் ஆசிரியர்களின் பெயரைக் குறிப்பிடுக.

(1) கம்யூனிசக் கட்சியின் அறிக்கை

..............................................................................................................

(2) லெவியாதன் (*Leviathan*)

..............................................................................................................

**34.** அரசியலமைப்புக்கள் மூன்று பிரதான வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் **இரண்டைப்** பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**35.** அரசியல் கட்சி முறைமை ஐந்து வகைப்படும். அவற்றுள் **இரண்டைப்** பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**36.** பிரித்தானிய அரசியலமைப்பு பல மூல தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. அவற்றுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**37.** 'சோசலிச அரசானது அடிப்படையில் தாராள ஜனநாயக அரசிலிருந்து வேறுபட்டது.' அத்தகைய வேறுபாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**38.** சோசலிச பெண்ணியவாதத்தின் இரண்டு பண்புகளைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**39.** அரைகுறை (அர்த்த) ஜனாதிபதி முறைமையின் (semi - presidential system) பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**40.** உலகில் பல பிரதான தேர்தல் முறைகள் நடைமுறையில் உள்ளன. அவற்றுள் இரண்டைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**41.** தற்கால உலகில் சர்வதேச அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் சர்வதேச பயங்கரவாத அமைப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**42.** சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினை வடிவமைத்த இரு பிரதான வெளிநாட்டுக் கொள்கை அணுகுமுறைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**43.** (1) இலங்கையில் 'இராஜகாரிய' முறையினை இல்லாதொழித்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் யாது?

..........................................................................................

(2) காலனித்துவ இலங்கையின் சட்டசபைக்கு முதன்முதலில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தத்துவத்தை (elective principle) அறிமுகம் செய்த அரசியலமைப்பு சீர்திருத்தம் யாது?

..........................................................................................

**44.** சிறுபான்மை சமூகங்களின் நலன்களைப் பாதுகாக்க டொனமூர் அரசியலமைப்பு மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**45.** டொனமூர் அரசியலமைப்பின் கீழ் இரண்டு அரச சபைத் தேர்தல்கள் இடம்பெற்றன. எந்தெந்த ஆண்டில் அவை இடம்பெற்றன?

(1) ..........................................................................................

(2) ..........................................................................................



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**46.** சோல்பரி அரசியலமைப்பின்கீழ் பொதுச் சேவை ஆணைக்குழு நிறுவப்பட்டதற்கான காரணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

**47.** (1) இலங்கையின் முதலாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதி யாரால் நியமிக்கப்பட்டார்?

..............................................................................................

(2) இலங்கையின் முதலாவது குடியரசு அரசியலமைப்பின்கீழ் ஜனாதிபதியின் பதவிக்காலம் எத்தனை வருடங்கள்?

..............................................................................................

**48.** 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின்கீழ் தாபிக்கப்பட்ட உயர் நீதிமன்றம் (Supreme Court) பல்வேறு விடயங்கள் குறித்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் **இரண்டைப்** பெயரிடுக.

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

**49.** இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் கீழ் ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டன. அவற்றுள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

**50.** எளிய பெரும்பான்மை தேர்தல் முறையின் குறைபாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

* * *



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி- II

31. கோத்திர அரசு
கிரேக்க நகர அரசு
முடியாட்சி / மன்னராட்சி,
தாராள ஜனநாயக அரசு
சோசலிஷ அரசு / சமவுடமைவாத அரசு
பாசிச அரசு
காலனித்துவ அரசு
பின் காலனித்துவ அரசு
நவ தாராள அரசு

32. I. பீட்டர் வெலன்ஸ்டீன
II. ஜொஹான் கல்துங்

33. I. கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரெட்டிக் ஏங்கல்ஸ்
II. தோமஸ் ஹொப்ஸ்

34. எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத (இரண்டு எழுதினால் புள்ளி 01)
ஒற்றை ஆட்சி மற்றும் சமஷ்டி ஆட்சி
நெகிழும் மற்றும் நெகிழா
ஜனாதிபதி மற்றும் [illegible]

35. ஒரு கட்சி முறை
இரு கட்சி முறை
பல கட்சி முறை
ஆதிக்க இரு கட்சி முறை
ஆதிக்க ஒரு கட்சி முறை

36. பாராளுமன்ற இறைமை/ அரசியலமைப்பு முடியாட்சி / கூட்டுப்பொறுப்புத் தத்துவம்/ சட்டத்தின் ஆட்சி/ பாராளுமன்ற அரசாங்கம்

37. தனியார் சொத்துரிமை மற்றும் உரித்துடைமைக்கு எதிரானது - சமூக சமத்துவத்தை உருவாக்குதல்
தொழிலாளர் சுரண்டலுக்கு எதிரானது
வகுப்பு ரீதியான சமத்துவமின்மைக்கு எதிரானது
பொருளாதாரத்தினை அரசு கட்டுப்படுத்தும்
கூட்டுடைமை

38. சோசலிசம் மாத்திரமே பெண்களுக்கு விடுதலையினையும் முழு அளவிலான சமத்துவத்தையும் வழங்கும்
பெண் விடுதலைக்கான போராட்டம் வெறுமனே பெண்கள் அமைப்புகளால் மாத்திரம் அல்லாமல் சமூகத்தில் சமத்துவத்திற்காக போராடும் ஏனைய அமைப்புக்களுடன் இணைக்கப்பட வேண்டும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

39. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மற்றும் நியமிக்கப்படும் பிரதமரைக் கொண்ட அரசாங்கம்
ஜனாதிபதி வழமையாக பிரதமரை நியமிப்பதுடன் பாராளுமன்றத்தினை கலைக்கும் அதிகாரத்தினையும் கொண்டுள்ளார்
ஜனாதிபதியின் பதவிக்காலம் நிச்சயிக்கப்பட்ட தவணைக்காலத்திற்கு வறையறுக்கப்பட்டிருக்கும்
பிரதமர் மற்றும் அமைச்சரவை ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் பொறுப்புக்கூற வேண்டும்
ஜனாதிபதி அரசின் தலைவராக காணப்படுவார். பிரதமர் அரசாங்கத்தின் தலைவராக செயற்படுவார். ஆயினும் ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைவருடன் இணைந்து பிரதமரின் பொறுப்புகளை பகிர்ந்துக்கொள்ள முடியும்.

40. தொகுதிவாரி தேர்தல் முறை அல்லது எளிய பெரும்பான்மை தேர்தல் முறை / பிரதேச வாரி
விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை
கலப்புத் தேர்தல் முறை

41. ISIS Hamaz
Al- Queda Thalifan

42. மேற்கு சார்பு
சோசலிசம் சார்பு
அணிசேராமை

43. I. கோல்புருக் –
II. குறூ மக்களம்

44. நிர்வாகக்குழுக்கள் அல்லது நிறைவேற்றுக் குழுக்கள்
அரச சபைக்கு நியமிக்கப்பட்ட 8 நியமன உறுப்பினர்கள்
ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் அல்லது சமயத்தவர்களுக்கு நன்மையளிக்கும் அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மற்றும் மதத்தவர்களின் உரிமைகளை மீறும் சட்டங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் அதிகாரம் தேசாதிபதிக்கு காணப்பட்டது. மறுப்பாண்மை அதிகாரம்

45. I. 1931
II. 1936


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

46. அரசியல் தலையீட்டினைத் தடுத்தல்.
சுயாதீன தன்மையினை உறுதி செய்தல்.
சிறுபான்மையினருக்கு ஆட்சேர்ப்பு விடயத்தில் ஏற்படக்கூடிய பாகுபாட்டினை தடுத்தல்.
திறமை மற்றும் தகுதிக்கு முன்னுரிமை வழங்குதல்.

47. I. பிரதமரால்
II. நான்கு வருடங்கள்

48. அரசியலமைப்புடன் தொடர்புடைய விடயங்கள்
அடிப்படை உரிமை மீறலுடன் தொடர்புடைய விடயங்கள்
இறுதி மேன் முறையீட்டு நீதிமன்றம் என்ற வகையில் தீர்ப்பு வழங்கும் அதிகாரம்
ஆலோசனை வழங்கும் அதிகாரம்
தேர்தல் மனுக்கள் தொடர்பான விடயங்களை விசாரித்தல்
பாராளுமன்ற சிறப்புரிமை மீறலுடன் தொடர்புடைய விடயங்கள்
அரசியலமைப்பு நீதிமன் புனராய்வு

49. தேர்தல் ஆணைக்குழு
நிதி ஆணைக்குழு
மனித உரிமைகள் ஆணைக்குழு
பொலிஸ் ஆணைக்குழு
பொதுச் சேவை ஆணைக்குழு
எல்லை நிர்ணய ஆணைக்குழு
கணக்காய்வு ஆணைக்குழு
கொள்முதல் ஆணைக்குழு / தேசிய பெறுகை ஆணைக்குழு
இலஞ்ச ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு

50. கட்சிகள் பெறும் வாக்குகளின் எண்ணிக்கைக்கும் ஆசனங்களுக்கும் இடையில் விகிதாசாரம் பேணப்படுவதில்லை.
சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படுதல்.
சிறுபான்மை மற்றும் சிறிய அரசியல் கட்சிகள் பாதிக்கப்படுதல்.
வெற்றி பெற்ற வேட்பாளரை விட தோல்வியடைந்தவர்களின் வாக்குகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுதல்.
ஒரு சில குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் விருப்பத்தில் அரசாங்கம் தங்கியிருப்பதனால் அதன் சட்டத்தன்மை பாதிக்கப்படுகின்றது
இத்தேர்தல் முறையினை பெரும்பான்மை முறை (Majoritarian System) எனவும் வெற்றி பெறுபவர் அனைத்தையும் தனதாக்கிக் கொள்ளும் முறை (Winner takes all) எனவும் விமர்சிக்கப்படுகின்றது.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

**23 T II**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.

※ பகுதி **I** இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் பகுதி **II** இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் பகுதி **III** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

20 புள்ளி – அறிமுகம் - 02 முடிவு - 01 உள்ளடக்கம் - 17

## பகுதி I

**1.** அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்துக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக. (20 புள்ளிகள்)

**2.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விபரிக்குக.

(i) அரசுக்கும் பிரஜைகளுக்குமிடையிலான தொடர்பு

(ii) அரசுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான வேறுபாடுகள்

(iii) தேசிய அரசுகள் மீது உலகமயமாதலின் தாக்கம் $(10 \times 2 = 20$ புள்ளிகள்)

**3.** பின்வரும் அரசியல் கருத்தியல்களில் (ideologies) எவையேனும் **இரண்டினது** பிரதான பண்புகளை சுருக்கமாக ஆராய்க.

(i) தாராண்மைவாதம்

(ii) சோசலிசம்

(iii) பாசிசம் $(10 \times 2 = 20$ புள்ளிகள்)

## பகுதி II

**4.** டொனமூர் அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமையின் அரசியல் மற்றும் சமூக தாக்கத்தினைப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

**5.** 1947 / 1948 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்புடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைச்** சுருக்கமாக ஆராய்க.

(i) மகாதேசாதிபதி

(ii) செனட் சபை

(iii) பொதுச் சேவை ஆணைக்குழு

(iv) பாராளுமன்றின் இறைமை $(10 \times 2 = 20$ புள்ளிகள்)

**6.** 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் அமைவுச் சேர்க்கை மற்றும் மீயுயர்தன்மை பற்றி ஆராய்க. (20 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி - I

**வினா இல: 01**

1. **அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்துக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக**

**(20 புள்ளிகள்)**

இவ்வினா அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்துக்குமிடையிலான வேறுபாட்டினை விளக்கும் பரீட்சாத்தியின் திறனை பரிசோதிக்க முற்படுகின்றது.

Andrew Heywood என்பார் மக்கள் தாம் வாழும் சூழலில் காணப்படும் பொதுவான சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்க, பாதுகாக்க மற்றும் திருத்த முன்னெடுக்கும் செயற்பாடுகளை அரசியல் என வரையறை செய்தார். அரசியலில் செயற்பாட்டு மற்றும் கோட்பாட்டு அம்சங்கள் என இரண்டையும் அவதானிக்க முடியும்.

அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்துக்கும் இடையிலான வேறுபாட்டினை பின்வரும் வழிமுறைகளில் நோக்க முடியும்.

- அரசியலில் ஈடுபடுதல் / பிரயோக அரசியல்
- அரசியலைக் கற்றல்

அரசியலில் ஈடுபடுதல் பின்வருவனவற்றை குறித்து நிற்கின்றது.

- அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக செயற்படுதல்
- அரசாங்கமொன்றின் உத்தியோகப்பூர்வ பதவியொன்றில் செயற்படுதல்
- தேர்தலில் மற்றும் தேர்தல் பிரசாரத்தில் பங்குபற்றுதல்
- அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
- ஆர்ப்பாட்ட இயக்கங்களில் இணைந்து செயற்படுதல்

அரசியல் அரசாங்கத்தின் முறைசார் நிறுவனங்கள் மற்றும் அதன் செயற்பாட்டுடன் தொடர்புடையது.

அரசியல் என்பது பொது வாழ்க்கை மற்றும் பொது செயற்பாடுகளுடன் தொடர்புடையது. அரசியல் என்பது இன்று எங்கும் நிறைந்துள்ளது. எல்லாமே அரசியல் (சமூக ஊடகம், விளையாட்டு, இசை, சினிமா). இன்று அரசியல், சமூக மற்றும் கலாசார வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் பரவிக் காணப்படுகின்றது.

- அரசியல் என்பது அதிகாரப்பங்கீடு, செல்வம் மற்றும் வளங்களின் பங்கீடு என்பவற்றுடன் தொடர்புடையது.
- அரசியல் என்பது கூட்டு தீர்மானம் எடுப்பதற்க்கான அதிகாரம் மற்றும் சட்டபூர்வ அதிகாரத்தை பிரயோகிக்கும் ஒரு செயன்முறை என வர்ணிக்கப்படுகின்றது.
- உண்மையான அரசியல் செயன்முறைகளில் ஈடுபடுவோரை அரசியல்வாதிகள் என அழைக்கின்றோம். அவர்கள் அரசியல் கட்சிகளை உருவாக்கி தேர்தல்களில் போட்டியிட்டு அதிகாரத்தினை கைப்பற்றி அரசாங்கத்தினை நிர்வகிக்கின்றார்கள். இது பிரயோக அரசியல்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

அல்லது நடைமுறை அரசியலாக உள்ளது. இது அரசாங்கத்தின் செயற்பாட்டுடன் தொடர்புடையது.

- நடைமுறை அரசியலில் ஈடுபடுகின்ற பிரசைகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் அரசியல் குறித்த கல்விசார் அறிவோ அல்லது சிறப்பு தேர்ச்சியோ அவசியமில்லை. அவர்களுக்கு அரசியலில் ஈடுபடும் ஆர்வம், அர்ப்பணிப்பு மற்றும் குறிக்கோள் போதுமானது.

பின்வருவனவற்றையும் அரசியல் என வரையறை செய்யலாம்.

- அரசியல் அரசுடன் சம்பந்தப்பட்டது.
- அரசியல் மோதல் தீர்வுக்கான வன்முறை சாரா வழிமுறை
- அரசியல் என்பது மோதலுடன் தொடர்புடையது
- அரசியல் என்பது அதிகாரத்தை பிரயோகிப்பது
- அரசியல் மனித மற்றும் சமூக செயற்பாடு
- அரசியல் ஒரு பொது செயற்பாடு
- அரசியல் சூழ்நிலை சார்ந்தது.

ஆயினும் அரசியல் விஞ்ஞானம் அரசியலை முறையாக கற்பதனை குறித்து நிற்கின்றது. இது அரசு மற்றும் அரசாங்கம் தொடர்பான கோட்பாடுகள் அரசின் பண்புகள் அரசாங்கத்தின் பண்புகளை கற்பதனை குறிக்கின்றது.

அரசியல் விஞ்ஞானம் என்பது அரசியல் பற்றிய பொது அறிவினை குறிப்பதல்ல. இது அரசியல் தொடர்பான விசேட புரிதல், புலமை சார் புரிதல் மற்றும் விளக்கம் என்பவற்றினை குறித்து நிற்கின்றது. இத்தகைய புலமை சார் அறிவு மற்றும் புரிதலை அரசியல் விஞ்ஞானிகள் ஆய்வின் ஊடாக முன்வைக்கின்றனர். கற்பித்தல், எழுதுதல், ஆய்வு செய்தல் என்பன புலமைசார் அறிவினை பரப்புவதற்கான சிறந்த வழியாகும்.

அரசியல் விஞ்ஞானம் அரசாங்க முறைகள், அதிகாரம், அரசியல் சிந்தனைகள், அரசியல் நடத்தை அரசியல் அமைப்பு போன்ற விடயங்களின் மீது அதிக கவனம் செலுத்துகின்றது. ஆகவே இது அரசியலில் ஈடுபடுதல் மற்றும் பிரயோக அரசியலில் இருந்து வேறுபட்டது. அரசியலை முறையாக கற்கும் மாணவனை நாம் அரசியல்வாதி என குறிப்பிடுவதில்லை. தொழில்சார் அரசியல்வாதிகள் அரசியல் கோட்பாடு மற்றும் அரசியல் தத்துவங்கள் தொடர்பான விடயங்களில் நிபுணத்துவம் கொண்டிருக்க வேண்டும் என நாம் எதிர்பார்ப்பதில்லை.

ஆகவே நடைமுறைசார் அரசியல் ஈடுபாடு மற்றும் அரசியலை முறையாக கற்றல் ஆகியன இருவேறு அம்சங்கள் ஆகும். ஆயினும் அரசியல் விஞ்ஞானத்தில் நடைமுறை அரசியல் போக்குகள் குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் பின்வருவனவற்றை குறிப்பிடலாம்

- அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள்
- அதிகாரத்தினை கைப்பற்றுவதற்காக அரசியல் கட்சிகளுக்கிடையில் இடம்பெறும் போட்டி
- தேர்தல் பிரசாரங்கள்
- அரசியல்வாதிகளின் நடத்தை அல்லது வாக்காளர் நடத்தை


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- போர் / சமாதானம்
- அரசியல் மோதல்கள்/ போராட்டங்கள்/ கிளர்ச்சிகள்
- அரசியல் வன்முறை
- அரசாங்க முறைகள்
- அரசாங்கத்தின் கொள்கைகள் போன்றன அரசியல் விஞ்ஞானத்தினை முறையாக கற்கும் மாணவர்கள் கருத்தில் கொள்வர்.

முடிவுரையில் பரீட்சார்த்திகள் இவ் வேறுபாட்டினை மீள வலியுறுத்த வேண்டும்.

**வினா இல: 02**

**2. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விபரிக்குக.**

**(i). அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான உறவு (10 புள்ளிகள்)**

நவீன அரசுகளில் அரசுக்கும் பிரஜைகளுக்குமிடையிலான உறவு இரு விடயங்களை அடிப்படைகளைக் கொண்டுள்ளது.

01. பிரஜைகள் அனுபவிக்கும் அரசியல் உரிமைகள் ஊடாக அரசு-பிரஜை உறவு தீர்மானிக்கப்படுகின்றது.
02. பிரஜைகளின் அரசியல் கடப்பாடுகளினால் இந்த உறவு தீர்மானிக்கப்படுகின்றது.

அரசுக்கு அடிபணிவது மற்றும் விசுவாசத்தினைக் காட்டுவது பிரைஜைகளுக்குள்ள அடிப்படை அரசியல் கடப்பாடாகும். பிரஜைகள் அரசின் உறுப்பினர்கள் என்ற வகையில் பல உரிமைகளை அனுபவிக்கின்றார்கள். ஆகவே அவர்கள் அரசுக்கு தமது அடிபணிவினை, விசுவாசத்தினைக் காட்ட வேண்டும். பிரஜைகள் ஏன் அரசுக்கு கட்டுப்படுகின்றார்கள் என்பதற்கு பல காரணங்கள் உண்டு. அவை பின்வருமாறு,

அரிஸ்டோட்டில், சமூகத்தில் காணப்படும் உயர்ந்த நிறுவனம் என்பதாலும் உயர்ந்தளவிலான சமூக நலனை அரசு வழங்குவதினாலும் பிரஜைகள் அரசுக்கு அடிபணிய வேண்டும் என்றார்.

பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் அரசு மானிட சமூகத்தை ஒழுங்குகள், விதிகள், உரிமைகள், கடமைகள், நிறுவனங்கள், ஒழுக்கம் மற்றும் கலாச்சாரம் என்ற அடிப்படையில் ஒழுங்கமைப்பதாக குறிப்பிடுகின்றனர். அரசுக்கும் பிரஜைகளுக்குமிடையில் செயற்பாட்டு ரீதியான உறவு காணப்படுகின்றது.

சமூக ஒப்பந்தக் கோட்பாடு, அரசினை உருவாக்குகின்ற சமூக ஒப்பந்தம் அரசு-பிரஜைகளுக்கிடையிலான உறவைத் தீர்மானிக்கின்றது என வாதிடுகின்றது. ஆகவே அரசுக்கும் பிரஜைகளுக்கும் பரஸ்பர கடப்பாடுகள் உள்ளன. அரசு பிரஜைகளுக்கு பாதுகாப்பினை வழங்கி பிரஜைகளை பாதுகாக்கின்றது. ஆகவே பிரஜைகள் அரசுக்கு அடிபணிய வேண்டும்.

தாராள அரசியல் கோட்பாட்டாளர்கள் அரசு பிரஜைகளின் இயற்கை உரிமைகளை பாதுகாப்பதனால் அது பிரஜைகளின் அரசியல் கடப்பாட்டுக்கான அடித்தளத்தினை இடுகின்றது என குறிப்பிடுகின்றனர்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ரூசோவின் குடியரசுவாதம் அரசு சமூகத்தின் பொது விருப்பத்தினை பிரதிபலிப்பதாக குறிப்பிடுகின்றது. ஆகவே சகல பிரஜைகளும் அரசுக்கு அடிபணிய வேண்டும்.

பிரஜைகள் வாக்குரிமையினை பயன்படுத்துவதன் மூலம் தம்மை அரசுடன் பிணைக்கின்றார்கள். வாக்களிப்பதன் மூலம் அரச நிர்வாகத்தில் பங்கேற்கின்றார்கள். பொருத்தமான தரப்பினரை நேர்மையுடன் வாக்களித்து பிரஜைகள் தெரிவுசெய்யாவிட்டால் அரசாங்கம் பலவீனமாக காணப்படும்.

பிரஜைகள் அரசாங்கத்திற்கு வரி செலுத்துகின்றார்கள்: வரிப்பணம் அரச இயந்திரம் செயற்படுவதற்கு, அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கு அவசியமாகும். வரியினை உரிய நேரத்தில் செலுத்தாவிட்டால் அரசாங்கத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடையும்.

பிரஜைகள் அரசாங்கத்தின் கடமைகளை முறையாக நிறைவேற்ற கடப்பட்டுள்ளார்கள். சட்டத்தை மதித்தல், வாக்களித்தல், வரி செலுத்துதல் என்பவற்றிற்கு அப்பால் சென்று ஏனைய கடமைகளையும் சரிவர நிறைவேற்ற வேண்டும். அது சமூகத்தின் வளர்ச்சி, அரசாங்கத்தின் வளர்ச்சி மற்றும் ஸ்த்திரத்தன்மைக்கு அவசியமாகும்.

**(ii). அரசுக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான வேறுபாடுகள் (10 புள்ளிகள்)**

இவ்வினா அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்கும் திறனை மதிப்பிட முற்படுகிறது.

அரசியல் கருத்தாடல்களில் அரசும் அரசாங்கமும் ஒரே அர்த்தத்தில் பயன்படுத்தப்படுவதனை அவதானிக்க முடியும். ஆயினும் அவை இரண்டும் வேறுபட்ட நிறுவனங்களாகும். அவற்றினை பின்வருமாறு நோக்கலாம்.

1) அரசாங்கம் அரசின் ஒரு அங்கம் மாத்திரமேயாகும். அரசு மக்கள்தொகை, ஆள்புலம், இறைமை, அரசாங்கம் மற்றும் தேசியத்துவம் ஆகிய கூறுகளை கொண்டது. அரசாங்கம் அதில் ஒரு அங்கம் மாத்திரமே.

2) அரசாங்கம் அரசின் முகவராகும். அரசாங்கம் அரசின் நோக்கங்களை அடைந்து கொள்ள செயற்படுகின்றது. அரசின் விருப்பத்தினை சட்டங்களாக மாற்றுகின்றது. அரசாங்கம் அரசின் சார்பாக அதிகாரத்தினையும் அதிகாரத்துவத்தினையும் பிரயோகிக்கின்றது.

3) அரசு கண்ணுக்கு புலப்படாது ஆனால் அரசாங்கம் அப்படியல்ல. அரசு என்பது ஒரு எண்ணக்கரு. அது வரையறுக்கப்பட்ட ஆல்புலத்தில் ஒழுங்கமைந்துள்ளது. அதனை கண்ணால் பார்க்க முடியாது. அரசாங்கம் அரசில் வாழும் மக்களால் உருவாக்கப்படுகின்றது. அரசாங்கம் மக்கள் பிரதிநிதிகளால் உருவாக்கப்படுகின்றது. அதற்கு நிச்சயிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு மற்றும் கட்டமைப்பு காணப்படுகின்றது. அது அரசின் அதிகாரத்தினை ஒரு குழுவினர் பிரயோகிப்பதனை குறித்து நிற்கின்றது.

4) அரசாங்கம் அரசில் வாழும் ஒரு பிரிவினரால் உருவாக்கப்படுகின்றது. சகல மக்களும் அரசின் ஒரு பகுதியாகும். எல்லா மக்களும் அரசின் பிரஜைகளாவர். ஆயினும் அரசாங்கம் மக்கள் பிரதிநிதிகளால் உருவாக்கப்படுகின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட சிலர் அரசாங்கத்தினை உருவாக்கி மக்களின் பிரதிநிதிகளாக செயற்படுவர்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

5) அரசின் உறுப்புரிமை கட்டாயமானது. ஒரு நாட்டில் வாழும் மக்கள் அரசின் உறுப்பினர்களாவர். ஒவ்வொருவரும் பிறப்பின் மூலம் அரசின் உறுப்புரிமையினைப் பெறுகின்றனர். ஆகவே அரசின் உறுப்புரிமை பிரஜை என்ற வகையில் இயல்பாகவே கிடைக்கப்பெறுகின்றது. அரசாங்கத்தின் உறுப்புரிமை அத்தகையதல்ல, அது கட்டாயமானதல்ல.

6) இறைமை அதிகாரம் அரசுக்குரியது, அரசாங்கத்துக்கல்ல. இறைமை அரசின் முக்கிய கூறாகும். அது அரசுக்குரியது. அரசாங்கம் அரசின் சார்பாக இவ்வதிகாரத்தினை பிரயோகிக்கின்றது. இறைமை முழுமையானது, தனிமுதன்மையானது, அது அரசின் மீயுயர் அதிகாரமாகும். ஆயினும் அரசாங்கம் நிச்சயிக்கப்பட்ட மற்றும் வரையறு க்கப்பட்ட அதிகாரங்களையே பிரயோகிக்கின்றது.

7) ஆள்புலம் அரசுக்குரியது. ஆள்புலத்தின் மீது அரசு தனிமுதன்மை அதிகாரத்தினையும் நியாயாதிக்கத்தினையும் கொண்டுள்ளது. அரசின் ஆள்புலத்தினை பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. அரசாங்கம் உருவாக்கும் சட்டங்கள் அரசின் ஆள்புலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும். ஆயினும் அரசாங்கத்திற்கு ஆள்புலம் உரித்தாகுவதில்லை.

8) ஒவ்வொரு அரசுக்கும் தனித்துவமான ~~ஐந்து~~ 04 கூறுகள் உண்டு, அவை மாறுவதில்லை. ஆயினும் அரசாங்கம் என்பது அதன் வடிவம், ஒழுங்கமைப்பு மற்றும் மாதிரியில் வேறுபடும். உதாரணமாக பாராளுமன்ற, ஜனாதிபதி, கலப்பு, ஜனநாயக, சர்வாதிகார, முடியாட்சி என்பவற்றினை குறிப்பிட முடியும்.

9) அரசு நிலையானது, அரசாங்கம் நிலையற்றது.

பின்வரும் விடயங்களையும் இவ்வினாவிற்கு கவனத்தில் கொள்ள முடியும்.

- ✓ அரசு மீயுயர் அதிகாரம் கொண்டது. சமூகத்தின் ஏனைய எல்லா நிறுவனங்களை விடவும் மேலானது. அரசின் ஆள்புலத்தில் வாழும் சகலரும் அரசின் சட்டத்திற்கு அடிபணிய வேண்டும்.
- ✓ அரசு இன்றி அரசாங்கம் சாத்தியமாகலாம், ஆயினும் அரசாங்கம் ஒன்று இல்லாத அரசினை சிந்திக்கவும் முடியாது.
- ✓ அரசு அதிகாரத்தினை வெளிப்படுத்த அரசாங்கம் காரணமாக உள்ளது. அரசாங்கம் பொதுவில் அரச நிறுவனங்களை மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல், ஒழுங்குபடுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. உதாரணமாக பொலிஸ், இராணுவம், கல்வி, சுகாதாரம் என்பவற்றினை குறிப்பிடலாம்.
- ✓ அரசு சமூகத்தின் நீடித்த நலன்கள் மீது கரிசனை காட்டுகின்றது. உதாரணமாக சட்ட ஒழுங்கினைப் பேணுதல், சமூக ஸ்திரத்தன்மை, தேசிய பாதுகாப்பு மற்றும் ஐக்கியம் என்பவற்றினைக் குறிப்பிடலாம். ஆயினும் அரசாங்கம் தவிர்க்க முடியாதவாறு கட்சி அரசியலை, அரசியல் கருத்தியல் மற்றும் தனிப்பட்ட விருப்பங்களை அடிப்படையாகக் கொண்டு அதிகாரத்தினைப் பிரயோகித்து கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**(iii). தேசிய அரசுகளின் மீது உலகமயமாதலின் தாக்கம் (10 புள்ளிகள்)**

உலகமயமாதல் தொடர்பான கருத்தாடல்களில் அதிகம் பேசப்படும் விடயம் தேசிய அரசுகளாகும். காரணம் உலகமயமாதலின் காரணமாக தேசிய அரசுகளின் தன்மை மாறியுள்ளமையாகும்.

உலகமயமாதலின் காரணமாக அரசின் பணிகள் மாற்றத்துக்குள்ளாகியுள்ளன. இதற்கு சுதந்திரச் சந்தை, சந்தைப் பொருளாதாரம் மற்றும் சுதந்திர முதலீடுகள், வர்த்தக பரிமாற்றல்கள் போன்ற பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. ஆகவே உலகமயமாதல் அரசின் செயற்பாடுகளை பல்வேறு வழிகளில் பாதித்துள்ளது.

1) அரசின் பொருளாதாரச் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளது. தாராளமயமாக்கத்துடன் இணைந்த தனியார்மயமாக்கம் அரசின் பொருளாதார செயற்பாடுகளை மட்டுப்படுத்தியுள்ளது. பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட்டுள்ளதுடன் அரசின் பொருளாதார வகிபாகம் சுருங்கியுள்ளது. அரசின் செயற்பாடுகளை சந்தை சக்திகள் மற்றும் சர்வதேச (நாடுகடந்த) அமைப்புக்கள் ஆக்கிரமித்துள்ளன.

2) சர்வதேச பொருளாதாரத்தில் அரசின் வகிபங்கு குறைவடைந்துள்ளது. குறிப்பாக சுதந்திர வர்த்தகம், ~~சந்தை~~ போட்டி சந்தை மற்றும் பல்தேசிய கம்பனிகள் மற்றும் சர்வதேச பொருளாதார அமைப்புகளான ஐரோப்பிய ஒன்றியம், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக மையம் என்பன சர்வதேச பொருளாதாரத்தில் அரசின் வகிபங்கினை குறைத்துள்ளன. / இணங்கவேண்டி உள்ளது

3) அரசின் இறைமை அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது அல்லது வீழ்ச்சியடைந்துள்ளது. அதிகரித்த பரஸ்பர சர்வதேச தங்கியிருத்தல் அரசுகளின் வெளி இறைமையினை பாதித்துள்ளது. ஒவ்வொரு அரசும் சர்வதேச பொருளாதார முறைமையில் முக்கிய நிறுவனங்களாக காணப்படும். உலக வர்த்தக மையம், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற அமைப்புகளின் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டியுள்ளன. அத்துடன் பல்தேசிய மற்றும் நாடுகடந்த கம்பனிகளின் செயற்பாடுகள் உள்நாட்டு அரசியலில் செல்வாக்கு செலுத்துவதுடன் அவற்றின் செயற்பாடுகள் ஆட்சி மாற்றத்திற்கும் வழிசெய்துள்ளன.

4) அரசுகள் மீதான மக்களின் எதிர்ப்பு/ உலகமயமாதல் மக்களுக்கிடையிலான சமூக - பொருளாதார கலாச்சார தொடர்புகளை பெரியளவில் அதிகரித்துள்ளது. தகவல் தொழிநுட்பத்தின் வளர்ச்சி, போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் என்பன உலகினை கிராமமாக மாற்றியுள்ளது. ஆகையால் ஒரு அரசில் வாழும் மக்கள் இன்னொரு அரசில் வாழும் மக்களுடன் இலகுவில் தொடர்பு கொள்ள, அரசுகளை ஒப்பீடு செய்ய, வாழ்க்கை முறையினை ஒப்பீடு செய்ய வழிசெய்துள்ளது. ஆகையால் அரசுகள் மீதான எதிர்ப்பும் அதிகரித்துள்ளது.

5) அரசின் இராணுவ அதிகாரத்தின் முக்கியத்துவம் குறைந்துள்ளது. அரசுகள் தேசிய அதிகாரத்தின் முக்கிய கருவியாக இராணுவத்தினைப் பயன்படுத்தினாலும் அதன் முக்கியத்துவம் அதிகரித்த உலகமயமாதலினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் சில அரசுகள் உலக பயங்கரவாதத்தின் காரணமாக தேசியப் பாதுகாப்பு மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டினை இராணுவ பலத்தின் மூலம் வலுப்படுத்தியுள்ளன என்ற வாதமும் உண்டு. உதாரணம் ஐக்கிய அமெரிக்கா.

6) சர்வதேச சமவாயங்கள் மற்றும் உடன்படிக்கையின் அதிகரித்த தலையீடு: பல சர்வதேச மனித உரிமைகள் மற்றும் பொருளாதார சமவாயங்கள் மற்றும் உடன்படிக்கைகள் அரசின் மீது சில மட்டுப்பாடுகளை விதித்துள்ளன. அரசுகள் அத்தகைய உடன்படிக்கைகளின் ஒழுங்கு விதிகளை


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

பின்பற்றவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. உலக பயங்கரவாதத்தினை எதிர்த்து போராடுதல், அணுவாயுதம், சுற்றாடல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் போன்றவற்றினை கையாளுதல், மனித உரிமைகளை பாதுகாத்தல் போன்ற காரணங்களுக்காக அரசுகள் இத்தகைய உடன்படிக்கைகளில் காணப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

7) பொது நலத்திட்டங்கள் மீதான முதலீடுகளின் வீழ்ச்சி: தீவிர உலகமயமாதலின் காரணமாக சமூக நல முதலீடுகள், சேம நலத்திட்டங்கள் என்பன வீழ்ச்சியடைந்துள்ளன. இதற்கு போட்டித்தன்மையினைக் கொண்ட பொருளாதாரம், தனியார்மயமாக்கம், உலக பொருளாதார நெருக்கடி போன்ற பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இதனால் வறுமை, வருமான பங்கீட்டில் தீவிர சமத்துவமின்மை என்பன ஏற்பட்டுள்ளன.

8) உலகமயமாதலின் காரணமாக தோற்றம் பெற்றுள்ள தீவிரவாத அமைப்புக்கள் தேசிய அரசுகளின் மீது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பு: இவ்வினாவுக்கு பரீட்சார்த்திகள் உலகமயமாதல் தேசிய அரசுகள் மீது ஏற்படுத்தியுள்ள பாதகமான தாக்கம், சாதாகமான தாக்கம் குறித்து விடைகளை முன்வைக்கலாம். அத்துடன், உலகமயமாதலின் காரணமாக தேசிய அரசுகள் எவ்வாறு நிலைமாற்றம் கண்டுள்ளன போன்ற விடயங்களையும் முன்வைக்கலாம். மேலும் உலகமயமாதலின் வகைகள் (பொருளாதார, சமூக, கலாசார/அரசியல்) குறித்தும் எழுதலாம். ஆகவே இவ்விடயங்களை கருத்தில் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.

**வினா இல: 03**

**3. பின்வரும் அரசியல் கருத்தியல்களில் எவையேனும் இரண்டினது பிரதான பண்புகளை சுருக்கமாக ஆராய்க**

**(i). தாராண்மைவாதம் (10 புள்ளிகள்)**

நோக்கம்:

இவ்வினா தாராண்மைவாதம் மற்றும் அதன் பண்புகள் குறித்த பரீட்சாத்தியின் புரிதல் மற்றும் விளக்கும் திறனை பரீட்சிக்கின்றது.

தாரண்மைவாதம் அரசின் தான்தோன்றித்தனமாக தலையீட்டிலிருந்து விடுதலை அல்லது விடுபடும் சுதந்திரம் போன்ற தனிமனித சுதந்திரத்தை ஆதரிக்கின்றது. இதனால் தனிமனித சுதந்திரம் என்பது தாராண்மை வாதத்தின் மைய எண்ணக்கருவாக உள்ளது. இதன்படி, பிரஜைகள் அரசின் தலையீடின்றி சுயமாக தமது வாழ்வை ஒழுங்குபடுத்தவும் அனுபவிக்கவும் சுதந்திரத்தை கொண்டிருக்க வேண்டும்.

தாராள அரசியல் சிந்தனையாளர்கள் அரசின் எதேச்சதிகாரம் மற்றும் ஆட்சியாளர்களிலிருந்து பிரஜைகளையும் அவர்களது சுதந்திரத்தையும் பாதுகாக்கும் பொறிமுறைகளை ஆதரித்தனர். சட்டவாட்சி, அடிப்படை உரிமைகள், யாப்புறுவாதம், வரம்புக்குட்பட்ட அரசாங்கம் மற்றும் அதிகார வேறாக்கம் போன்றவை அரசின் எதேச்சதிகாரத்திலிருந்து பிரஜைகளை பாதுகாக்கும் முக்கிய பொறிமுறைகளாகும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

பரீட்சாத்திகள் கூடவே (அ) தான்தோன்றித்தனமாக கைதிலிருந்து விடுதலை (ஆ) அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான வரி விதிப்பிலிருந்து விடுதலை மற்றும் (இ) சித்திரவதைலிருந்து விடுதலை போன்ற முக்கிய தாராள கருத்துக்களையும் அடையாளப்படுத்த முடியும்.

தலையிடாமை என்பது தாராண்மை வாதத்தின் மிக முக்கியமான அரசியல் அர்த்தமாகவுள்ளது. இது சுதந்திர சந்தை பற்றிய பொருளியல் தத்துவமாக அல்லது பொருளாதாரப் பரப்பில் சுதந்திரம் என்பதாக தோன்றியது.

அதன் அரசியல் அர்த்தத்தில் "தலையிடாமை" என்பது சமூகத்தில் அரசின் வகிபாகம் குறித்த குறிப்பிட்ட வகையான தத்துவத்தை குறித்து நிற்கின்றது. இந்தவகையில் அது அரசாங்கம் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பரப்புகளில் தலையீடு செய்யக்கூடாது என்பதை உணர்த்தி நிற்கின்றது. இது தனி மனிதர்களின் சுதந்திரத்திற்கு மேலதிகமாக பொது வாழ்வின் சுதந்திரத்தைப் பாதுகாக்க முற்பட்ட ஒரு கருத்தாக உள்ளது.

தாராளவாதிகள் வரம்புக்குட்பட்ட அரசாங்கத்தை ஆதரிக்கின்றனர். இந்த வகையில் தம்மை ஆளுவதற்கு மக்கள் ஆட்சியாளர்களிடம் ஒப்படைத்த நிபந்தனைகளின் பிரகாரம் அரசின் அதிகாரம் வரம்புக்குட்படுகின்றது. மக்கள் தம்மை ஆளுவதற்கு வரையறுக்கப்பட்ட பதவிக் காலத்துக்கு மட்டுமே ஆட்சியாளர்களுக்கு அதிகாரத்தை வழங்குகின்றனர். லொக்கின் இவ் எண்ணக்கரு "வரம்புக்குட்பட்ட அரசாங்கம்" எனும் தத்துவமாக அறியப்படுகிறது.

தாராண்மை வாதம் சட்டவாட்சி, உரிமைகள் மசோதா, சமநிலைத் தலையீடுகள், பொருளாதார மற்றும் சமூக பரப்புகளில் குறைந்தளவு அரசின் தலையீடு போன்ற தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட தாராள அரசாங்கத்தை ஆதரிக்கின்றது.

பரீட்சாத்திகள் தாராண்மை வாதத்தின் பிரதான பண்புகளாக பின்வருவனவற்றையும் அடையாளப்படுத்த முடியும்.

**தனிமனித வாதம்:** ஏதேனும் சமூக குழு அல்லது கூட்டு அமைப்பைக் காட்டிலும் தனி மனிதன் குறித்து மிக உயரிய முக்கியத்துவத்தின் மீதான நம்பிக்கையை பிரதிபலிக்கின்றது.

**சுதந்திரம்:** தாராண்மை வாதத்தின் மிக அடிப்படையான பெறுமானமாக உள்ள இது சமத்துவம், நீதி அல்லது அதிகாரத்தை விடவும் முன்னுரிமை பெறுகின்றது.

**சமத்துவம்:** இது சகல தனி மனிதர்களுக்கும் தமது ஆற்றல்களை யதார்த்தமாக்கிக் கொள்ள சமமான வாய்ப்பினை வழங்கும் அத்தகைய சம வாய்ப்பினை குறித்து நிற்கின்றது.

**சகிப்புத்தன்மை:** தாராளவாதிகள் சகிப்புத்தன்மையை தனிமனித சுதந்திரத்தினது உத்தரவாதம் மற்றும் சமூக செழுமைப்படுத்தலுக்கான வழிமுறை ஆகிய இரண்டும் என நம்புகின்றனர்.

**சம்மதம்:** தாராண்மைவாத கண்ணோட்டத்தில் அதிகாரம் மற்றும் சமூக உறவு முறைகள் எப்போதும் சம்மதம் அல்லது விருப்புடன் கூடிய உடன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

**யாப்புறுவாதம்:** இவ் இலக்கினை அரசாங்க அதிகாரத்தை வேறாக்குதல், அரசாங்கத்தின் வெவ்வேறு நிறுவனங்களுக்கிடையில் சமநிலைத் தலையீடுகளை ஏற்படுத்துதல், அத்துடன் அரசுக்கும் தனி மனிதனுக்கும் இடையிலான உறவை வரையறுக்கும் அத்தகைய உரிமைகள் மசோதாவை உள்ளடக்கிய தொகுக்கப்பட்ட அல்லது எழுதப்பட்ட யாப்பினை ஸ்தாபித்தல் ஊடாக எய்த முடியும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**சட்டவாட்சி**: சமூக-பொருளாதார மற்றும் அரசியல் அந்தஸ்தினை கருத்திற் கொள்ளாது அனைவரும் சட்டத்தின் முன் சமம் அத்துடன் சட்டத்துக்கு மேலாக எவரும் இல்லை என்ற வகையில் நடாத்தப்பட வேண்டும்.

**(ii). சோஷலிசம் (10 புள்ளிகள்)**

இவ் வினா சோஷலிசத்தின் பண்புகள் குறித்த பரீச்சாத்தியின் புரிதல் மற்றும் விளக்கும் திறனை பரீட்சிக்கும் நோக்கத்தை கொண்டுள்ளது.

சொத்தை பொதுவுடைமையாக்குதல் மற்றும் உற்பத்தி செயன்முறையை சமூகத்தின் பொதுச்செயன்முறையாக ஆக்குவதன் மூலம் தனியார் சொத்தின் கீழான சமத்துவமின்மையை இல்லாது செய்ய முடியும் என நம்பியது. விஞ்ஞான சோஷலிசத்தின் பிரதான கருத்துக்கள் பின்வருமாறு:

முதலாளித்துவ சமூகம் மற்றும் பொருளாதார முறை தொழிலாளர்களின் உழைக்கும் சக்தியை சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்டது.

தனியார் சொத்துடைமை மற்றும் உற்பத்திக் கருவிகளின் தனியுடைமை இருக்கும் வரை உழைப்புச் சுரண்டலும் வர்க்க சமத்துவமின்மையும் தொடரும்.

ஊழியச் சுரண்டல், ஆழமான சமூக சமமின்மைகள் அத்துடன் மக்கள் வறுமை ஆகியன முதலாளித்துவத்தைப் பீடித்துள்ள நோய்களாகும். அவற்றை ஒழிக்க வேண்டுமாயின் முதலாளித்துவத்தின் இடத்துக்கு சோஷலிச சமூக-பொருளாதார முறையை பதிலீடு செய்ய வேண்டும். அத்தகைய அடிப்படை மாற்றத்திற்கு சோஷலிச புரட்சி அவசியமானது.

சோசலிஷத்தின் கீழ் உற்பத்திக் கருவிகள் சமூகத்தின் பொதுவுடைமையாக இருக்கும். பொருளாதார உற்பத்தி மற்றும் விநியோகம் சமூக செயன்முறையாக இருக்கும்.

ஒரு சிலரின் கைகளில் பொருளாதாரம் குவிந்து காணப்படாது. சமூக செல்வம் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் சமமாக பங்கீடு செய்யப்படும்.

தனியார் சொத்துடைமை இல்லாமல் போகின்ற போது வர்க்க சமத்துவமின்மை மற்றும் இறுதியில் வர்க்கங்களே இல்லாமல் போய்விடும்.

முதலாளித்துவ சமூகத்தில் அத்தகையதொரு சோசலிச நிலைமாற்றத்துக்கான முயற்சியை பாட்டாளி வர்க்கம் மேற்கொள்ள வேண்டும். பாட்டாளி வர்க்கம் சோஷலிச புரட்சிக்கான தலைமைத்துவத்தை வழங்க வேண்டும்.

இப்புரட்சி முதலாளித்துவம் மற்றும் தொழிலாளர் வர்க்கங்களுக்கிடையிலான வர்க்கப் போராட்டத்தில் நிறைவுறும்.

சோஷலிச அரசின் மிகப் பிரதானமான பணி தனியார் சொத்துடமையை இல்லாதொழித்தல் மற்றும் முதலாளித்துவ பொருளாதார மற்றும் சமூக முறையை சோஷலிச முறையாக மாற்றுவதாகும்.

சோஷலிசம் கம்யூனிசத்தை நோக்கிய சமூக அபிவிருத்தியை முன்னகர்த்துவதற்கான முதற்படியாகும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

பரீட்சாத்திகள் பின்வரும் விடயங்களையும் அடையாளப்படுத்த முடியும். சோஷலிசம் சமூக உடமை, சமூக சமத்துவம், பொது மனிதத்துவம், சகோதரத்துவம் மற்றும் பங்கீட்டு நியாயத்தை ஊக்குவிக்கின்றதுடன் அது வர்க்க அரசியலுடன் தொடர்புபட்டது.

**(iii). பாசிசம் (10 புள்ளிகள்)**

இவ் வினா பாசிசத்தின் பிரதான பண்புகள் குறித்த பரீட்சாத்தியின் புரிதல் மற்றும் அவற்றை விளக்கும் திறனை பரிசோதிக்கும் நோக்கைக் கொண்டுள்ளது.

பாசிசம் குறிப்பிட்ட வகையானதொரு சர்வாதிகார ஆட்சியை உருவாக்கும் நோக்கைக் கொண்டிருந்தது.

இவ்வகை சர்வாதிகார ஆட்சியில் அரசு, சமூகம் மற்றும் பிரஜைகள் மீது தனி முதன்மைக் கட்டுப்பாட்டினை கொண்டிருந்தது. அரசியல் கோட்பாட்டில் இது அனைத்தாண்மைவாதம் என அழைக்கப்படுகின்றது.

ஏனெனில் அனைத்தாண்மை வாதமும் சமுதாயத்தின் மீது அரசுக்கு கட்டுப்பாடில்லா அதிகாரத்தை வழங்கும் ஓர் கருத்தியலாக உள்ளது.

அந்த வகையில் அணைத்தாண்மை வாதம் பாசிசத்துடன் தொடர்புபட்ட நவீன வகை சர்வாதிகார ஆட்சியாக உள்ளது.

**பாசிசத்தின் பண்புகள்**

**தலைவர் வழிபாடு**

தலைமைத்துவத்தின் வரம்பில்லா அதிகாரத்தை நிபந்தனையின்றியும் முழு விருப்புடனும் ஏற்றுக்கொள்ளல் பாசிச கருத்தியலின் ஒரு விசேட பண்பாக உள்ளது.

**அரசு வழிபாடு**

முசோலினியே அரசை வழிபடும் கருத்தியலை தொடக்கி வைத்தார். இதன் அடிப்படைக் கருத்து எவ்வித கேள்வியுமின்றி ஒவ்வொரு பிரஜையும் அரசின் வரம்பில்லா அதிகாரத்தை ஏற்பதுடன் நிபந்தனையின்றி அரசிடம் சரணடையவும் வேண்டும்.

**தீவிர இனவாதம்**

தீவிர இனவாதம் என்பது ஜேர்மனிய பாசிசக் கருத்தியலில் வளர்ச்சியடைந்தது. நாசிசத்தின் கீழ் ஜேர்மனியர்கள் மிகச்சிறந்த மற்றும் புனிதம் மிக்க ஆரிய இனத்தவர்களாக கருதப்பட்டனர்.

**தீவிர இராணுவ வாதம்**

தீவிர இராணுவ வாதம் மற்றும் இனவாதத்தினால் தூண்டப்பட்ட ஜேர்மன் பாசிசவாதிகள் இரண்டாம் உலகப்போரை தொடங்கி ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றியதுடன் மில்லியன் கணக்கில் யூதர்கள் மற்றும் நாடோடிகளை கொன்று குவித்தனர்.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**வன்முறைப்பிரயோகம் மற்றும் அச்சமூட்டுதலை அரசியல் ஆயுதமாக பயன்படுத்தல்.**

பாசிச அரசும் பாசிச திட்டமும் ஒட்டுமொத்த ஜேர்மன் சமுதாயத்தை பாசிசவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர். பாசிசத்தை எதித்தவர்களை அச்சுறுத்த, சிறையிலடைக்க மற்றும் கொலை செய்ய பாசிசவாதிகள் வன்முறை மற்றும் பயங்கரவாதத்தை பயன்படுத்தினர்.

பாசிசம் முதலாளித்துவம், தாராண்மைவாதம், தனிமனித வாதம், கம்யூனிசம் ஆகியவற்றுக்கு எதிரான ஒரு வகை கருத்தியலாகும்.

Giobanni gentile

பாசிச தத்துவஞானி ~~ஜென்ரைல்~~ (1875-1944) குறிப்பிட்ட போது "அனைத்தும் அரசுக்காக, அரசுக்கெதிராக எதுவும் இல்லை, அரசுக்கு புறம்பாக எதுவுமில்லை"

குறிப்பு : மேலுள்ள பண்புகள் தவிர்ந்த ஏனைய பண்புகளையும் பரீட்சார்த்தி முன்வைக்க முடியும். பொருத்தப்பாட்டை கருத்திற் கொண்டு புள்ளிகள் வழங்கவும்.

Download all Past Papers-> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி - II

**வினா இல: 04**

**4. டொனமூர் அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமையின் அரசியல் மற்றும் சமூக தாக்கத்தினை பரிசீலனை செய்க? (20 புள்ளிகள்)**

நோக்கம்: சர்வசன வாக்குரிமையினால் ஏற்பட்ட அரசியல்-சமூக தாக்கங்களை பரிசீலிக்கும் திறனை இவ்வினா மதிப்பிட முற்படுகின்றது.

சர்வசன வாக்குரிமை இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பு முனையாக அமைந்தது. அது அரசியல் மற்றும் சமூக பரப்புகளில் பெரியளவில் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

சர்வசன வாக்குரிமையின் காரணமாகவே சாதாரண பிரஜைகளுக்கு தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணையும் வாய்ப்புக் கிடைத்தது. உதாரணமாக 1924ம் ஆண்டு 205,000 மாக காணப்பட்ட வாக்காளர் தொகை 1931ம் ஆண்டாகும் போது ~~1,500,000~~ 1575932 மாக அதிகரித்தது. இது சாதாரண மக்களுக்கு அரசியல் அதிகாரம் சென்றடைந்தமையினை எடுத்துக்காட்டுகின்றது. 1936ம் ஆண்டாகும் போது தேசிய அரசியல் கிராமிய மக்களை நோக்கி நகர்ந்ததுடன் சாதாரண மக்கள் கட்சி அரசியலை நோக்கி சமூகமயமாக்கப்பட்டார்கள். 1936 பதி. வாக்கை 24 51351 அளிக்கப்பட் 11 46683 54.69%

சர்வசன வாக்குரிமை சாதாரண மக்களின் தேவைகள் தொடர்பாக அரசியல் தலைவர்களை பொறுப்புக்கூற செய்தது. பொது மக்களின் நலன்கள் மற்றும் தேவைகளை புறக்கணித்தால் அடுத்த தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்படுவோம் என்ற யதார்த்தத்தினை அரசியல்வாதிகளுக்கு கற்பித்தது.

நாட்டில் பொறுப்புக்கூறும் அரசாங்கம் ஒன்றினை தாபித்தது. ஜனநாயக ஆட்சி முறைக்கான நிறுவனக்கட்டமைப்புகளை உருவாக்கியது (அரச கழகம் / மந்திரி சபை / நிறைவேற்றுக்குழு / உள்ளூராட்சி).

சர்வசன வாக்குரிமை அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுவதற்கு வழிசெய்தது. 1935ம் ஆண்டு LSSP உருவாக்கப்பட்டமை இதற்கு சிறந்த உதாரணமாகும். 1943 இல் கம்யூனிசக் கட்சியும் பின்னர் ஐக்கிய தேசிய கட்சி, சமஸ்டிக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் புரட்சிகர லங்கா சமசமாஜக் கட்சி போன்றன உருவாக்கப்பட்டன. 1947ம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் அரசியல் கட்சிகள் பிரதான செயற்பாட்டாளர்களாக காணப்பட்டன. அத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றிபெற்று அரசாங்கத்தினை அமைத்தது. பின்னர் 1952ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பிரதான போட்டியாளர்களாக காணப்பட்டன. அப்போக்கு அண்மைக் காலம் வரை தொடர்ந்தது.

சர்வசன வாக்குரிமை சமூக நலத்திட்டங்களுக்கான அடித்தளத்தினை இட்டது. குறிப்பாக 1931-1947 வரையிலான காலப்பகுதியில் அதிகளவிலான சமூக நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் கல்வி, சுகாதாரம் மற்றும் உணவு மானியம் என்பன முக்கியத்துவம் பெற்றன. சமூக நலத்திட்டங்களுக்கான முதலீடுகள் கணிசமாக அதிகரித்தது. டொனமூர் காலத்திற்குப் பின்னரும் இந்நிலை தொடர்ந்தது. இவையனைத்தும் இலங்கையில் நலன்புரி அரசொன்று தோற்றம் பெறுவதற்கான அடித்தளத்தினை இட்டது.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

அரசியல் ரீதியாக சாதாரண மக்கள் வலுவூட்டப்பட்டமை சர்வசன வாக்குரிமையினால் ஏற்பட்ட பிரிதொரு முக்கிய மாற்றமாகும். சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட மக்கள் தமது சமூக விடுதலை குறித்து சிந்திப்பதற்கும் அவை தொடர்பாக கோரிக்கைகளை முன்வைப்பதற்கும் சர்வசன வாக்குரிமை வழி செய்தது. இதன் மூலம் சாதாரண மக்களின் பிரச்சினைகள் அரசியல் அரங்கில் விவாதிக்கப்பட்டது.

சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமையானது மனித உரிமைகள் வளர்ச்சியடைவதற்கு அடித்தளமிட்டது. குறிப்பாக சமூக உரிமைகள் (கல்வி / சுகாதாரம் / தொழில் வாய்ப்பு / சமூக பாதுகாப்பு), தொழிலாளர் நலன் பேண் சட்டங்கள், தொழிலாளர் உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகளான கருத்து வெளியீட்டு சுதந்திரம், ஒன்றுகூடுதல் ஆகிய உரிமைகள் வளர்ச்சியடைவதற்கு உதவின. இதில் இலவசக்கல்வியும் இலவச சுகாதாரமும் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக நகர்வில் பெரியளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தியது.

சர்வசன வாக்குரிமை இலங்கையில் தேர்தல் முறையின் வளர்ச்சிக்கும் வித்திட்டது.

மிக முக்கியமாக சர்வசன வாக்குரிமை பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கான அடித்தளத்தினை இட்டது. இலங்கை மக்கள் கடந்த 94 ஆண்டுகளாக பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை அனுபவிப்பதற்கு சர்வசன வாக்குரிமை பிரதான காரணமாகும்.

**முடிவுரை**

பரீட்சார்த்திகள் மேற்கூறிய விடயங்களின் சாராம்சத்தினை உள்ளடக்கி முடிவுரையொன்றினை வழங்க முடியும்.

**வினா இல: 05**

**5. சோல்பரி அரசியலமைப்புடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைச் சுருக்கமாக ஆராய்க.**

**(i). மகா தேசாதிபதி (10 புள்ளிகள்)**

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் பிரித்தானிய முடியின் கீழேயே இலங்கையின் நிர்வாக விடயங்கள் இடம்பெற்றன. பிரித்தானிய முடியின் பெயரில் நிர்வாக விடயங்களை முன்னெடுப்பதற்காக அவரின் பிரதிநிதியாக மகா தேசாதிபதி காணப்பட்டார். அவரை இலங்கை பிரதமரின் சிபாரிசின் பெயரில் பிரித்தானிய முடி நியமித்தார். மகா தேசாதிபதியின் பதவிக்காலம் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. மாகதேசாதிபதிக்கான வருடாந்த சம்பளம் 8000 பவுண்களாகும்.

அரசியலமைப்பு சில அதிகாரங்களை மகா தேசாதிபதிக்கு வழங்கியிருந்தது. அவற்றை பிரதமரின் ஆலோசனையின் பெயரில் பயன்படுத்தினார். அவற்றில் பாராளுமன்றத்தினை கூட்டுதல், ஒத்திவைத்தல், சட்டங்களுக்கு அனுமதி வழங்குதல், செனட் சபைக்கான உறுப்பினர்களை நியமித்தல், தேர்தல் முடிந்த பின்னர் சனப்பிரதிநிதிகள் சபைக்கு ஆறு உறுப்பினர்களை நியமித்தல், எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை நியமித்தல், நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், உயர் நீதிமன்றத்துக்கான நீதிபதிகளை நியமித்தல்,



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

அமைச்சரவையின் செயலாளர்கள் மற்றும் நிரந்தர செயலாளர்களை நியமித்தல். சட்டமா அதிபர், தேர்தல் திணைக்களத்தின் ஆணையாளர், பிரதமர், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர்களை நியமித்தல் போன்ற விடயங்களில் பரந்தளவிலான அதிகாரங்கள் காணப்பட்டன.

ஆயினும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதல், வெளிநாட்டு தூதுவர்களை நியமித்தல், இராஜதந்திர அதிகாரிகளை நியமித்தல் மற்றும் போர் பிரகடனம் செய்தல் போன்ற அதிகாரங்கள் மகா தேசாதிபதிக்கு வழங்கப்படவில்லை. இவ்வதிகாரங்கள் பிரித்தானிய முடியிடம் மாத்திரம் காணப்பட்டது.

அரசியலமைப்பில் குறிப்பிடப்படாத ஓர் அதிகாரத்தினை மகா தேசாதிபதி பிரயோகித்தார். அது குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாகும். மகா தேசாதிபதி பிரித்தானிய முடியின் பெயரிலேயே பொது மன்னிப்பு வழங்க வேண்டும். ஆயினும் இவ்வதிகாரத்தை நீதி அமைச்சரின் ஆலோசனையின் பெயரில் மட்டுமே பயன்படுத்த முடியும்.

மகா தேசாதிபதி சில சமூக மற்றும் சம்பிரதாயபூர்வமான கடமைகளையும் மேற்கொண்டார். பொது இடங்களுக்கு செல்லுதல், பாடசாலை பரிசளிப்பு விழாக்களில் உரையாற்றுதல், கலாச்சார செயற்பாடுகளில் பங்குபற்றுதல் என்பன இதில் அடங்கும். புதிய பாராளுமன்ற அமர்வுகளுக்கு தலைமை தாங்குதல் மற்றும் சிம்மாசன பிரசங்க உரை நிகழ்த்துதல் போன்ற அதிகாரங்களும் காணப்பட்டன.

குறிப்பு: பரீட்சாத்திகள் இங்கு குறிப்பிடப்படாத சில விடயங்களை முன்வைத்திருக்கலாம். அவற்றையும் கவனத்தில் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.

**(ii). செனட் சபை (10 புள்ளிகள்)**

சோல்பரி ஆணைக்குழு செனட் சபை ஒன்றினை தாபிப்பதற்கு பரிந்துரை செய்தது. இது இரண்டாம் மன்றமாகக் காணப்பட்டது. செனட் 30 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அதில் 15 பேர் சனப்பிரதிநிதிகள் சபையிலிருந்து ஒற்றை மாற்று வாக்கு முறையின் மூலம் தெரிவு செய்யப்பட்டார்கள். ஏனைய 15 பேரை மகா தேசாதிபதி பிரதமரின் சிபாரிசின் பெயரில் நியமித்தார்.

மகா தேசாதிபதி செனட் சபைக்கான உறுப்பினர்களை நியமிக்கும் பொழுது பொதுச் சேவையில் ஆர்வமுள்ள, தொழில்சார் நிபுணர்களை (வர்த்தகம், கைத்தொழில், கல்வி, சட்டம், மருத்துவம், விஞ்ஞானம், பொருளியல், வங்கியியல்) நியமிக்க முயற்சிக்க வேண்டும் என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. செனட் சபை உறுப்பினராக நியமிக்கப்படுபவர்கள் குறைந்தது 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.

செனட்டர்கள் ஆறு வருட பதவிக்காலத்துக்கு நியமிக்கப்படுகின்றார்கள். ஆயினும் அதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை பதவி விலகுவர். ஆகவே பாராளுமன்றத்தினை கலைப்பதனால் செனட்டர்களின் பதவிக்காலம் பாதிக்கப்படுவதில்லை.

செனட் சபை நிதி மசோதா தவிர்ந்த ஏனைய மசோதாக்களை ~~ஒரு வருடம்~~ 06 மாதம் வரை காலம் தாழ்த்தும் அதிகாரத்தினை கொண்டிருந்தது. ஆயினும் நிதி மசோதாக்களை ஒரு மாத காலம் வரை காலம் தாழ்த்தலாம். மேலும் செனட் சபைக்கு நிதி மசோதா ஒன்றினை கொண்டு வர முடியாது. இங்கு நிதி மசோதா என்பது வருடாந்த வரவு செலவு திட்டத்தினையே குறித்து நிற்கின்றது.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

அரசியலமைப்பின் படி இரண்டு அமைச்சர்கள் செனட்டில் இருந்து நியமிக்கப்பட வேண்டும். அதில் ஒருவர் நீதி அமைச்சராக இருக்க வேண்டும். செனட் சபையில் இருந்து நீதி அமைச்சர் நியமிக்கப்படுவதற்கு காரணம் குறித்த நபர் கட்சி அரசியலில் நேரடியாக ஈடுபடாத ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதனை உறுதி செய்வதற்காகும். மேலும், அமைச்சர்களின் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கும் மற்றும் அவர்களுக்கு கீழ் வருகின்ற அமைச்சின் திணைக்களங்களுக்கும் உதவி செய்வதற்காக பாராளுமன்ற செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர். இங்கு பிரதி அமைச்சர்களே பாராளுமன்ற செயலாளர்கள் என அழைக்கப்பட்டனர். அத்துடன் இரண்டு பாராளுமன்ற செயலாளர்களுக்கு மேல் செனட் சபையில் இருந்து நியமிக்கப்பட முடியாது. இது தொடர்பாக சோல்பரி அரசியலமைப்பின் உறுப்புரை 47 மற்றும் 48 களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பாராளுமன்ற செயலாளர்களின் எண்ணிக்கை அமைச்சர்களின் எண்ணிக்கையினை விஞ்சலாகாது.

சோல்பரி ஆணைக்குழுவினர் நாட்டில் அரசியல் கல்விக்கு செனட் சபை முக்கியமானதொரு பங்களிப்பினை வழங்கும் என எதிர்பார்த்தனர். ஆயினும் செனட் சபைக்கு நியமிக்கப்பட்டவர்கள் நடைமுறையில் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்ட நிபுணத்துவத்தினைக் கொண்டிருக்கவில்லை. செனட்டர்களின் நியமனத்தில் இனத்துவ சிறுபான்மை மக்கள், சமய மற்றும் சாதி அடிப்படையிலான சிறுபான்மை மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், நடைமுறையில் அரசியல் கட்சிகளின் நலன்களை அடிப்படையாகக் கொண்டே நியமிக்கப்பட்டனர். கட்சிக்காக நீண்ட காலம் அர்ப்பணித்தவர்கள் அதிகளவில் செனட் சபைக்கு நியமிக்கப்பட்டார்கள். இது அரசியலமைப்பின் எதிர்பார்ப்புகளுக்கு முரணாக அமைந்தது. தேர்தல் அரசியலை விரும்பாத நிபுணர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கும் சபையாக செனட் அமையும் என ஆணைக்குழு எதிர்பார்த்தது. ஆயினும் யதார்த்தம் வேறுப்பட்டதாகவே அமைந்தது.

**(iii). பொதுச் சேவை ஆணைக்குழு (10 புள்ளிகள்)**

இது பொதுச் சேவையினை முகாமைத்துவம் செய்வதற்கு பொறுப்பாக இருந்த சுதந்திரமான ஆணைக்குழுவாகும். ஆட்சேர்ப்பு, இடமாற்றம், ஒழுக்க நடவடிக்கை, பதவி உயர்வு மற்றும் சேவை இடைநிறுத்தம் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் அதிகாரத்தினைக் கொண்டிருந்தது.

மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அவர்கள் பிரதமரின் சிபாரிசின் பெயரில் மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டார்கள்.

பதவிக்காலம் ஐந்து வருடமாகும். அதில் ஒருவரை பிரதமரின் சிபாரிசின் பெயரில் மகாதேசாதிபதி தலைவராக நியமிப்பார்.

பொதுச் சேவை ஆணைக்குழு பல நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்டது. ஆட்சேர்ப்பு விடயத்தில் பாகுபாட்டினையும் அரசியல் தலையீட்டினையும் தடுக்கும் அதிகாரம் காணப்பட்டது. ஆட்சேர்ப்பு விடயத்தில் சிறுபான்மை மக்களுக்கு காணப்பட்ட பாகுபாடு சார்ந்த அச்சத்தினை களைவதற்கும் பொதுச் சேவையின் மீது நம்பிக்கையினைக் கட்டியெழுப்பவும் இவ்வாணைக்குழு உதவும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆகவேதான், இதனை சிறுபான்மையினர் காப்பீடாகவும் கருதினர்.

அரசியல் அமைப்பில் காணப்பட்ட சில ஏற்பாடுகள் இவ்வாணைக்குழுவினை சுயாதீன ஆணைக்குழுவாக மாற்றியது. அந்த வகையில் ஆணைக்குழுவின் தீர்மானங்களில் தலையீடு செய்வோருக்கு தண்டனை வழங்கும் மற்றும் அபராதம் விதிக்கும் ஏற்பாடு காணப்பட்டது. உறுப்பினர்களின் சம்பளம் பாராளுமன்ற திரட்டு நிதியில் இருந்து வழங்கப்பட்டது. அவர்களின் பதவிக்காலத்தில் சம்பளத்தினைக் குறைக்க



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

முடியாது. ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் உறுப்பினர்கள் எந்த ஒரு அரச சேவை பதவியினையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆயினும் அரசியல் பதவிகள் அதில் உள்ளடக்கப்படவில்லை.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் முழுமையான சுதந்திரத்தினை அரசியலமைப்பின் பிரிவு 60(1) உறுதி செய்தது. இதன் மூலம் அரசியல் தலையீடுகளில் இருந்து விடுபட்டு செயற்படும் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாணைக்குழு பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற கடமைப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பான விமர்சனங்களும் எழுந்தன. அமைச்சின் அதிகாரிகளின் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற கடமைப்பட்டிருந்தார்கள். ஆயினும் அமைச்சின் அதிகாரிகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் அமைச்சர்களுக்கு இருக்கவில்லை என்ற விமர்சனம் காணப்பட்டது. இதன் காரணமாகவே 1972ம் ஆண்டு அரசியலமைப்பில் பொதுச் சேவை முழுமையாக அரசியல் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

### (iv). பாராளுமன்ற இறைமை (10 புள்ளிகள்)

இலங்கை பாராளுமன்றம் பிரித்தானிய பாராளுமன்றம் கொண்டிருந்த இறைமை அதிகாரத்தினை கொண்டிருக்கவில்லை. அந்த வகையில் சோல்பரி அரசியலமைப்பு சட்டவாக்க அதிகாரத்தின் மீது சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. அவை பின்வருமாறு,

அரசியலமைப்பின் 29(2) பிரிவு

இப்பிரிவானது பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரத்தினை மட்டுப்படுத்தியது. இதன்படி பாராளுமன்றம் எந்த ஒரு சமூகத்தினையும் பாகுபாட்டிற்கு உள்ளாக்கும் அல்லது எந்த ஒரு சமயத்தவர்களினதும் மத சுதந்திரத்தினை பறிக்கும் எந்த ஒரு சட்டத்தினையும் இயற்றுவதனை தடுத்தது. இவை இரண்டு காரணிகளுக்காக முக்கியத்துவம் பெற்றது. ஒன்று மதச் சுதந்திரத்தினை அனுபவிக்கும் உரிமையினை உத்தரவாதம் செய்தது. இரண்டாவது பெரும்பான்மை இனத்தவர்களால் சிறுபான்மை இனத்தவர்களுக்கு ஏற்படக்கூடிய பாகுபாட்டில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு உதவியது.

நீதிப்புணராய்வு அதிகாரம்: அரசியலமைப்புக்கு முரணான சட்டங்களை மீளாய்வு செய்யவும் தடை செய்யவும் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் காணப்பட்டது.

அரசியலமைப்பின் பிரிவு 29(4)

அரசியலமைப்பில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்வதானால் பிரிவு 29(4) னை பின்பற்ற வேண்டும். அரசியலமைப்பினை திருத்தினாலோ அல்லது ஏதேனும் ஒரு ஏற்பாட்டினை நீக்கினாலோ அது சனப் பிரதிநிதிகள் சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும். அதன் பின்னர் சபாநாயகர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டமையினை உறுதிசெய்து சான்றிதழ் ஒன்றினை வெளியிட வேண்டும். அதன் பின்னர் குறித்த சட்டத்தினை நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்த முடியாது. இச்செயன்முறையினை பின்பற்றாவிட்டால் நீதிமன்றம் குறித்த சட்டத்தினை வலிதற்றதாக்கி தீர்ப்பு வழங்கும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**வினா இல: 06**

**(06) 1972ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அரசு பேரவையின் அமைவுச்சேர்க்கை மற்றும் மீயுயர் தன்மையினை ஆராய்க. (20 புள்ளிகள்)**

**<u>தேசிய அரசு பேரவையின் அமைவுச்சேர்க்கை</u>**

முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டசபை ஓரங்க சபையாக காணப்பட்டதுடன் அதனை தேசிய அரசு பேரவை என அழைத்தார்கள். அதன் அமைவுச் சேர்க்கையை விளக்குவது கடினமான காரியமல்ல. ஏனென்றால் அது மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை மாத்திரமே கொண்டிருந்தது. அத்துடன் சோல்பரி அரசியல் அமைப்பில் காணப்பட்ட நியமன உறுப்பினர் முறைமையினை 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பு நீக்கியது.

தேசிய அரசு பேரவைக்கான உறுப்பினர்கள் எளிய பெரும்பான்மை தேர்தல் முறைமையின் கீழ் தெரிவு செய்யப்பட்டார்கள். பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்வரிசை அங்கத்தவர்களாகவும் ஒரு சிலர் முன்வரிசை அங்கத்தவர்களாகவும் வகைப்படுத்தப்பட்டார்கள். அரசியலமைப்பில் 40(1) பிரிவுக்கிணங்க தேசிய அரசு பேரவை 6 வருட பதவிக்காலத்தை கொண்டிருந்தது.

**<u>தேசிய அரசு பேரவையின் மீயுயர் தன்மை</u>**

1972ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மிக முக்கியமான பண்பு இதுவாகும். அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் மிக தெளிவாக குறிப்பிட்ட விடயம் யாதெனில், தேசிய அரசு பேரவையே

அரச அதிகாரத்தின் மீயுயர் கருவியாக இருக்குமே அன்றி வேறு எந்த நிறுவனமும் அல்ல என்பதாகும்.

அரச அதிகாரத்தின் மீயுயர் கருவி என்ற வகையில் தேசிய அரசு பேரவை பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருந்தது.

1. மக்களினால் வழங்கப்பட்ட சட்டவாக்க அதிகாரத்தினை தேசிய அரசுப் பேரவையூடாக நடைமுறைப்படுத்தியது.
2. மக்களினால் வழங்கப்பட்ட நிறைவேற்று துறை அதிகாரத்தை பிரதமர், அமைச்சரவை மற்றும் ஜனாதிபதி ஊடாக நடைமுறைப்படுத்தியது.
3. நீதிமன்றங்களின் ஊடாக நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தியது.

தேசிய அரசு பேரவைக்கு அரசியலமைப்பினை இரத்து செய்ய, திருத்த மற்றும் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கும் அதிகாரம் காணப்பட்டது.

தேசிய அரசு பேரவைக்கு சட்டங்களை உருவாக்கவும் இருக்கின்ற சட்டங்களை இரத்து செய்யவும் அதிகாரம் காணப்பட்டது. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க மக்களின் மீயுயர் சட்டவாக்க அதிகாரத்தினை பயன்படுத்தி சட்டங்களை உருவாக்கியது.

தேசிய அரசு பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் சபாநாயகரின் அங்கீகாரத்துடன் சட்டமாகும். அவற்றை கேள்விக்குட்படுத்தவோ அல்லது நீதியை நிர்வகிக்கும் நிறுவனமொன்றில் சவாலுக்குட்படுத்தவோ முடியாது.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

1972ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் நீதித்துறைக்கு நீதிப்புனராய்வு அதிகாரம் வழங்கப்படவில்லை. ஆகவே சட்டங்களை நீதிமன்றங்களில் கேள்விக்குட்படுத்த முடியாது. ஆயினும் குறித்த மசோதா ஒன்றின் யாப்புறு தன்மையினை பிரத்தியேக நீதிமன்றமான அரசியலமைப்பு நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்த முடியும். ஆயினும் நடைமுறையில் இந் நீதிமன்றம் வினைத்திறனாக செயற்படவில்லை. மக்களின் சட்டவாக்க அதிகாரத்தினை கொண்ட மீயுயர் நிறுவனமாக தேசிய அரசு பேரவை காணப்பட்டமையினால் நடைமுறையில் அதன் சட்டவாக்க அதிகாரங்களுக்கு எவ்வித மட்டுப்பாடுகளும் காணப்படவில்லை.

**வினா இல: 07**

**07. பின்வரும் தலைப்புக்களோடு தொடர்புபடுத்தி தற்போதைய அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியை ஆராய்க.**

**(i). ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறை** (1982 - 2001) தேர்தல்

**(ii). ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

**(i). ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறை (05 புள்ளிகள்)**

1978 அரசியலமைப்பினை வரைந்தவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதி ஒருவரை அறிமுகம் செய்ய தீர்மானித்தனர். இதன் நோக்கம் சமூகத்திலுள்ள அனைத்து குழுக்களையும் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய ஓர் தேசிய பொது நபராக ஜனாதிபதி இருப்பார் என்பதாகும். ஜனாதிபதியை மக்கள் தெரிவு செய்யும் முறை வேறுபட்ட கருத்துக்களை தோற்றுவித்தது. இவற்றுள் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான மிகச் சிறந்த முறை எது என்பது முக்கியம் பெறுகின்றது. இக் கருத்துக்கள் ஒரே தேர்தலில் இரண்டு சுற்றுக்களை இணைக்கும் மேலதிக வாக்களிப்பு முறையினை ஏற்றுக் கொள்ளச் செய்தது. சிலர் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் முறை பிரத்தியேகமானதெனவும் அது இரு சுற்று முறை (Two Round System) மற்றும் மேலதிக வாக்களிப்பு முறை (Supplementary vote) என்பவற்றின் கலவையெனவும் வாதிடுகின்றார்கள்.

இம்முறையின் கீழ் பெரும்பான்மை ஆதரவை பெற்றவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுகின்றார்.

இம்முறை வெற்றி பெறும் வேட்பாளர்கள் தமது சொந்த அரசியல் அல்லது இனம் சார் வாக்காளர்களுக்கு அப்பால் சென்று ஆதரவினை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை உருவாக்குகிறது. இதுவரை (2024 தவிர) வெற்றி பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் முதல் சுற்றில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றதுடன், விருப்பு வாக்குகளை கணிப்பீடு செய்யும் தேவையை ஏற்படுத்தவில்லை.

ஜனாதிபதியை தெரிவு செய்வதில் ஒவ்வொரு வாக்காளனும் தனது வாக்கினை எந்த ஒரு வேட்பாளருக்கும் அளிக்கும் அதேவேளை மூன்று வேட்பாளர்கள் போட்டிடும் பட்சத்தில் தனது இரண்டாவது விருப்பினையும் மூன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்களாயின் தனது இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பங்களையும் தெரிவிக்க முடியும்.

அறுதிப் பெரும்பான்மையைப் பெறும் வேட்பாளர் (செல்லுபடியாகும் வாக்குகளில் அரைவாசிக்கும் அதிகமான வாக்குகள்) நேரடியாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுகிறார். எந்தவொரு வேட்பாளரும் அறுதிப் பெரும்பான்மையினை பெறாதவிடத்து அதிகூடிய வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்கள் தவிர்ந்த

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ஏனைய வேட்பாளர்கள் போட்டியில் இருந்து நீக்கப்படுவதுடன் அவ்வாறு நீக்கப்பட்ட வேட்பாளர்களின் வாக்குக் சீட்டில் உள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பு வாக்குகள் முன்னணியில் உள்ள வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தால் அவை அவ் முன்னணியிலுள்ள வேட்பாளர்களின் மொத்த வாக்குகளுடன் சேர்க்கப்படும்.

அவ்வாறு கணிப்பீட்டில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் வேட்பாளர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதாக பிரகடனப்படுத்தப்படுவார். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளிடையே சமநிலை காணப்படுமாயின் திருவுளச்சீட்டின் மூலம் வெற்றி பெற்ற வேட்பாளர் பிரகடனம் செய்யப்படுவார்.

**(ii). ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் (15 புள்ளிகள்)**

தற்போதைய அரசியலமைப்பின் கீழ், ஜனாதிபதியே அரசின் தலைவர், நிறைவேற்றுத் துறையின் தலைவர், அரசாங்கத்தின் தலைவர் அத்துடன் ஆயுத படைகளின் பிரதம கட்டளையிடும் தளபதியாவார்.

பிரதமரை நியமித்தல் ஜனாதிபதி தனது பதவிக்குரிய அதிகாரங்கள் மற்றும் பணிகளில் ஆற்ற வேண்டிய மிக முக்கியமானதொரு பணியாகும். ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதமரை நியமிக்கின்றார். பிரதமரை நியமிப்பதில் ஜனாதிபதி எவரையும் கலந்தாலோசிக்கத் தேவையில்லை.

அமைச்சரவையின் தொழிற்பாட்டில் ஜனாதிபதியின் வகிபங்கு கணிசமானது. அவர் அமைச்சரவையின் உறுப்பினரும் அதன் தலைவரும் ஆவார். தற்போதைய அரசியலமைப்பு ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை தன்வசம் வைத்திருப்பதற்கும் எத்தனை அமைச்சரவை இலாகாக்களையேனும் தனக்கு ஒதுக்கிக் கொள்ளவும் (19ஆம் திருத்தச் சட்டம் இதனை அனுமதிக்கவில்லை) அனுமதிக்கிறது. ஜனாதிபதி அமைச்சர்களின் எண்ணிக்கை மற்றும் அமைச்சுக்களின் எண்ணிக்கைகளை தீர்மானிக்கும் அதிகாரத்தை இன்னும் கொண்டுள்ளதுடன் அதே போன்று அத்தகைய அமைச்சுக்களுக்கான விடயதானங்கள் மற்றும் பணிகளை ஒதுக்கீடு செய்கிறார். மேலும் ஜனாதிபதி தனது தற்றுணிவின் பேரில் அனைத்து அமைச்சர்களுக்கான செயலாளர்களை நியமிக்கக் கூடியவராக உள்ளார். இது மீளவும் ஜனாதிபதியிடத்தில் நிறைவேற்று அதிகாரம் ஒன்று குவிவதை பாதுகாக்கிறது.

ஜனாதிபதிக்கு அரச உயர்பதவிகளுக்கான நியமனங்களை அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரையின் பேரில் மேற்கொள்ள முடியும். அந்தவகையில் சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், ஒம்புட்ஸ்மன், பாராளுமன்ற செயலாளர் நாயகம், கணக்காய்வாளர் நாயகம் போன்ற நியமனங்களை குறிப்பிடலாம்

அரசியலமைப்பின் 32ஆவது பிரிவின் பிரகாரம் ஜனாதிபதி மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத்துக்கு வருகை தருவார். இப்பணியை புரிவதில் ஜனாதிபதி வாக்களிக்கும் உரிமை தவிர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரித்தான ஏனைய அனைத்து சலுகைகள், வரப்பிரசாதங்கள் மற்றும் அதிகாரங்களைக் கொண்டுள்ளார். அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரைக்கமைய, ஜனாதிபதி பாராளுமன்றின் ஒவ்வொரு புதிய அமர்வின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை முன்வைக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். ஜனாதிபதி கூடவே பாராளுமன்றின் சம்பிரதாயபூர்வ அமர்வுகளுக்கு தலைமை தாங்கும் அதிகாரத்தையும் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு இரண்டரை வருடங்கள் கழிந்ததன் பிற்பாடு எந்த நேரத்திலும் பாராளுமன்றைக் கலைப்பதற்கான அதிகாரத்தை கொண்டுள்ளார். பாராளுமன்றைக்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

கலைப்பதற்கு ஜனாதிபதி கொண்டுள்ள அதிகாரம் பாராளுமன்றம் ஜனாதிபதியின் விருப்பின் பிரகாரம் செயற்படுவதை உறுதி செய்வதற்கு ஜனாதிபதியிடம் உள்ள அரசியல் ஆயுதமாக உள்ளது. ஜனாதிபதியும் பாராளுமன்றின் பெரும்பான்மையும் ஒரு கட்சியை சார்ந்திருக்கும் போது சுயாதீன வாதப்பிரதிவாதங்கள் மற்றும் செயற்பாட்டிற்கான திறனை பாராளுமன்றம் கொண்டிருக்காது என்பதுடன் ஜனாதிபதியைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகளும் இல்லாமல் போகின்றது.

அரசியலமைப்பின் உறுப்புரை 35 இன் பிரகாரம் ஜனாதிபதி அடிப்படை உரிமைகள் மனுக்கள் தவிர சட்ட விடுபாட்டுரிமையைக் கொண்டுள்ளார். ஜனாதிபதிக்கெதிரான அடிப்படை உரிமைகள் மனுக்கள் சட்டமா அதிபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட வேண்டும்.

ஜனாதிபதி கொண்டுள்ள மற்றொரு முக்கியமான அதிகாரம் தனது பதவிக்காலத்தில் நான்கு வருடங்கள் பூர்த்தியடைந்ததன் பிற்பாடு உரிய நேரத்துக்கு முன்னராகவே ஜனாதிபதி தேர்தலொன்றுக்கு அழைப்பு விடுவதன் மூலம் தேர்தல் சுழற்சியை மாற்றும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார் என்பதாகும்.

நிறைவேற்று அதிகாரம் என்பது வெறுமனே சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன்று. அது கொள்கையைத் தீர்மானித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல், சட்டவாக்கத்தை ஆரம்பித்து வைத்தல், ஒழுங்கைப் பேணல், பொருளாதார மற்றும் சமூக நலன்புரியை ஊக்குவித்தல், வெளிநாட்டுக் கொள்கையை நெறிப்படுத்தல் மற்றும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதையும் உள்ளடக்கி நிற்கின்றது.

பாராளுமன்றில் ஜனாதிபதியின் கட்சி பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் போது, தான் நியமித்த பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சர்களுக்கூடாக சட்டவாக்க தலைமைத்துவம் மற்றும் நெறிப்படுத்தல், பாராளுமன்றைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றை ஜனாதிபதி மேற்கொள்கிறார்.

**வினா இல: 08**

**8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக**

**(i). இந்திய சமஷ்டி முறையின் பிரதான பண்புகள் (10 புள்ளிகள்)**

நோக்கம் :

இந்திய சமஷ்டி முறையின் பிரதான பண்புகளை விளக்கும் பரீட்சார்த்தியின் திறனை பரிசோதித்தல்.

இந்திய சமஷ்டி முறையின் பிரதானமான பண்புகள் இந்திய அரசியலமைப்பின் 1-11 வரையான உறுப்புரைகளில் குறிப்பிடப்படுகின்றன.

- இரு வகை அரசாங்கங்கள் ( மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள்)
- அதிகாரம் பிரிக்கப்பட்டிருத்தல் (மத்தி மற்றும் மாநில அரசுகளுக்கிடையில்)
- அரைகுறை சமஷ்டி அல்லது கலப்பு சமஷ்டி (சமஷ்டி முறையினதும் ஒற்றையாட்சி முறையினதும் பண்புகள் கலந்திருத்தல்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு : ஒரே அளவான அதிகாரங்கள் மற்றும் தீர்மானமெடுக்கும் அதிகாரம் சமஷ்டி அலகுகளுக்கு இல்லை. விசேட காரணங்கள் நிமித்தம் சில சமஷ்டி அலகுகள் ஏனையவற்றை விடவும் அதிக அதிகாரங்களை கொண்டுள்ளன.
- அரசியலமைப்பின் மீயுயர் தன்மை
- எழுதப்பட்ட அரசியலமைப்பு
- எஞ்சிய அதிகாரங்கள் மத்தியிடம் காணப்படல் : அரசியலமைப்பின் உறுப்புரை 245 இன் படி மத்திய,மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டதன் பிற்பாடு எஞ்சும் அதிகாரங்களை மத்திய அரசே வைத்துக் கொள்ளும். இது சிறந்த சமஷ்டி முறைக்கு எடுத்துக்காட்டாக கொள்ளப்படும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளில் உள்ள நடைமுறைக்கு முரணானதாகும்.
- மத்தியில் அதிகாரம் குவிந்துள்ள சமஷ்டி முறை: பலமான மத்தியும் பலவீனமான மாநில அரசுகளும். உதாரணமாக, 2015இல் திட்டமிடல் ஆணையம் ஒழிக்கப்பட்டமை.
- ஒற்றை குடியுரிமை: உறுப்புரைகள் 5-10 வரையில் குறிப்பிடப்படுவது போன்று மத்திய அரசின் குடியுரிமை மாத்திரமே வழங்கப்படுகிறது. இது ஐக்கிய அமெரிக்காவில் உள்ளது போன்று மத்திய அரசின் குடியுரிமை மற்றும் மாநில அரசின் குடியுரிமை என்ற இரட்டைக் குடியுரிமை வழங்கப்படுவதில்லை.
- சுதந்திரமான நீதித்துறை

குறிப்பு : மேலுள்ள பண்புகள் தவிர்ந்த ஏனைய பண்புகளையும் பரீட்சார்த்தி முன்வைக்க முடியும். பொருத்தப்பாட்டை கருத்திற் கொண்டு புள்ளிகள் வழங்கவும்.

### (ii). பிரான்சின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

பிரான்சிய ஜனாதிபதி முறை தனித்துவமானதும் மிகவும் பலமானதுமாகும். தற்கால ஜனநாயக உலகில் காணப்படும் அதிகாரமிக்க நிறைவேற்றுத்துறையில் ஒன்றாகும். பிரான்சிய ஜனாதிபதி ஐந்து ஆண்டுகளுக்கு பதவி வகிப்பதற்காக தெரிவு செய்யப்படுகின்றார். இரண்டு தடவைகளுக்கு மேல் அவர் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாது.

பிரான்சிய ஜனாதிபதி நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை, நீதித்துறை, வெளிவகாரம், தேசிய பாதுகாப்பு போன்ற விடயங்களில் முக்கியமான அதிகாரங்களை கொண்டுள்ளார். அவரே அரசு ~~மற்றும் அரசாங்கத்தின்~~ தலைவர். ~~அரசாங்கத்தின் உண்மையான தலைமைத்துவம் ஜனாதிபதியிடமே காணப்படுகின்றது~~. ஜனாதிபதியே பிரதமரை நியமிக்கின்றார். பிரதமருடன் இணைந்து ஜனாதிபதி அமைச்சரவை அமைச்சர்களை நியமிக்கின்றார். அமைச்சரவைக்கு ஜனாதிபதி தலைமை தாங்குகின்றார்.

பிரான்சிய அரசியலமைப்பு ஜனாதிபதிக்கு சில அவசரகால அதிகாரங்களை வழங்கி அவரை சக்திப்படுத்தியுள்ளது. உதாரணமாக, மக்கள் தீர்ப்பினை நடாத்துதல், பாராளுமன்றத்தினை கலைத்தல், புதிய தேர்தலுக்கு அழைப்பு விடுத்தல் என்பவற்றினை குறிப்பிட முடியும்.

நாட்டின் தேசிய கொள்கைகளைத் தீர்மானிப்பதில் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. அத்துடன் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட குற்றவியல் தண்டனைகளை இரத்துச் செய்ய, தடுக்க மற்றும்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க அதிகாரம் உண்டு. நீதித் துறையின் உயர் பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கவும் அதிகாரம் உண்டு.

பிரான்சிய ஜனாதிபதி பிரான்ஸ் நாட்டினை சர்வதேச அரங்கில் பிரதிநிதித்துவம் செய்வதுடன், சர்வதேச உடன்படிக்கைகளை கைச்சாத்திடுதல், பேரம் பேசுதல் மற்றும் தந்திரோபாய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரத்தினையும் கொண்டுள்ளார்.

அரசின் தலைவர் என்ற வகையில் வெளிநாடுகளில் இராணுவத்தினை அமர்த்தவும் அணுவாயுதத்தினை பயன்படுத்த கட்டளையிடவும் அதிகாரம் உண்டு. அரசியலமைப்பின் 16வது உறுப்புரை பிரான்ஸ் தேசம் தீவிர அச்சுறுத்தல் நிலையினை எதிர்கொள்ளும்போது ஜனாதிபதி ஒட்டுமொத்த நிறைவேற்று அதிகாரத்தையும் கட்டுப்பாட்டினையும் தனக்கு கீழ் கொண்டு வருவதற்கான இயலுமையினை வழங்கியுள்ளது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது (ஜேர்மனி/ பிரித்தானியா/ அமெரிக்கா) பிரான்சிய ஜனாதிபதி அதிக அதிகாரம் கொண்ட நபராக காணப்படுகின்றார். ஒரு பலமான ஜனாதிபதி என்பது ஐந்தாம் குடியரசின் பிரதான பண்பாகும். ஜனாதிபதியுடன் ஒப்பிடும்போது பிரதமர் ஒரு முகாமையாளர் என வர்ணிக்கப்படுகின்றார்.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் அவருக்கு விடுபாட்டுரிமை வழங்கப்பட்டுள்ளது. பதவியில் இருக்கும் ஜனாதிபதி ஒருவரை பதவி நீக்குவது இலகுவான காரியமல்ல.

ஒற்றையாட்சி அரசாங்க முறையும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மேலோங்குவதற்கு காரணமாகியுள்ளது.

### (iii). ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள்

ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பு மத்திய அரசாங்கத்திற்கு மூன்று வகை அதிகாரங்களை வழங்கியுள்ளது. ஐக்கிய அமெரிக்க மத்திய அரசாங்கம் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறையினைக் கொண்டமைந்துள்ளது. மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை ஜனாதிபதி, காங்கிரஸ் மற்றும் பெடரல் நீதிமன்றம் ஆகியன பிரயோகிப்பதற்கான ஏற்பாடுகளை அரசியலமைப்பு வழங்கியுள்ளது.

1. தெளிவாக வரையறுக்கப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் (expressed powers): இவ்வாதிகாரங்களை அரசியலமைப்பின் முதல் மூன்று உறுப்புரைகளில் காண முடியும். இதன்படி வரி அறவிடுதல், வர்த்தகத்தினை ஒழுங்குப்படுத்தல், குடியுரிமை வழங்கும் சட்டங்களை இயற்றுதல், பெடரல் நீதிமன்றங்களை உருவாக்குதல் (இவை உச்ச நீதிமன்றத்துக்கு கீழானவை), இராணுவத்தினை ஸ்தாபித்தல் மற்றும பேணுதல் என்பன இதன் கீழ் அடங்கும். அத்துடன் காங்கிரசுக்கு உள்ள அதிகாரங்கள் குறித்து அரசியலமைப்பின் உறுப்புரை 1, பிரிவு 8 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தவகையில் பாதுகாப்பு, போர் பிரகடனம் செய்தல், நாணயம், தபால் போன்ற விடயங்களை குறிப்பிட முடியும். இவையனைத்தும் தெளிவாக வரையறுக்கப்பட்ட அதிகாரங்களாக காணப்படுகின்றன.

2. உட்கிடையான அதிகாரங்கள் (implied powers): அரசியலமைப்பில் தெளிவாக வரையறுக்கப்படாத அல்லது வழங்கப்படாது அதிகாரங்களை குறித்து நிற்கின்றது. ஐக்கிய அமெரிக்க உச்ச நீதிமன்றம் இது குறித்து பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்களைப் பிரயோகிக்க அல்லது கையாள்வதற்கு அவசியமான அதிகாரங்களே உட்கிடக்கை அதிகாரங்கள் என


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

வியாக்கியானம் செய்தது. பரந்தளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட்டால் மாத்திரம் போதாது அவ்வதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் அவசியம் என உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது.

3. இயல்பான அல்லது தவிர்க்க முடியாத அதிகாரங்கள் (inherent powers): தேசிய அரசாங்கம் என்ற வகையில் சில தவிர்க்க முடியாத அதிகாரங்களை அமெரிக்க மத்திய அரசாங்கம் கொண்டுள்ளது. உதாரணமாக வெளிநாட்டு உறவுகளை பேணுதல், புலம்பெயர்வினைக் கட்டுப்படுத்தல் என்பவற்றினைக் குறிப்பிடலாம்.

அரசியலமைப்பின் 10வது உறுப்புரை மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை மட்டுப்படுத்துகின்றது. அரசியலமைப்பில் மத்திய அரசாங்கத்துக்கு வழங்கப்படாத ஒதுக்கு அதிகாரங்கள் மாநிலங்களுக்கு உரித்தாகும் என குறிப்பிடுகின்றது.

குறிப்பு: தரம் 13 ஆசிரியர் வழிகாட்டியில் (பக்கர் 28- 31 வரையில்) இது தொடர்பாக விரிவான விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே விடையினை மதிப்பிடும்போது அவற்றை கருத்திற் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.

**வினா இல: 09**

**2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான பண்புகளை விளக்குக.**

**(20 புள்ளிகள்)**

நோக்கம் :

2015 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியில் இலங்கை வெளிநாட்டுக் கொள்கையின் பண்புகளை அடையாளங் கண்டு அவற்றை விளக்கும் பரீட்சாத்தியின் திறனை பரிசோதித்தல்.

இதன் போது 2015 - 2019 வரையான நல்லாட்சி அரசாங்கம்(NUG) மற்றும் 2019 - 2023 வரையான பொதுஜன முன்னணி(SLPP) அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையின் பொதுவான மற்றும் விசேட பண்புகள் அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

**அறிமுகம்**

வெளிநாட்டுக் கொள்கை என்பது ஒரு நாடு வெளி உலகுடன் கொண்டுள்ள தொடர்பின் இயல்பினை விபரிக்கும் அதன் முக்கிய அம்சமாகவுள்ளது. ஒரு நாட்டில் இடம்பெறும் ஆட்சி மாற்றம் பொதுவாக அதன் வெளிநாட்டுக் கொள்கையின் இயல்பினை பாதிக்கின்றது.

**உள்ளடக்கம்**

- சுதந்திர இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை பொறுத்தவரை அது திசைமுகப்படுத்தல் மற்றும் அணுகுமுறை ஆகியவற்றில் கண்டுகொள்ளத்தக்க பண்புகளை வெளிப்படுத்தி வந்துள்ளது.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- அத்தகைய பண்புகளுள் கருத்தியல்(மேற்கு சார்பு, சோஷலிசம் சார்பு, அணிசேரா கொள்கை மற்றும் புவியியல் சார்(ஆசியா) அடையாளம் பிரதானமானது.

உதாரணமாக, தொடக்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கு சார்பானதாகவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான அரசாங்கம் சோஷலிசம் சார்பானதாகவும் பொதுவாக அடையாளங் காணப்பட்டன. பின்னர் இவ்விரு அரசாங்கங்களும் அணிசேராக் கொள்கையை தாம் பின்பற்றுவதாக கூறிக் கொண்டன. அதேபோன்று இவ்விரு அரசாங்கங்களும் வெளிநாட்டுக் கொள்கையை கொண்டு நடாத்துவதில் அவ்வப்போது 'ஆசியா' அடையாளத்தையும் வெளிக்காட்டின.

- இருப்பினும் 2015 முதல் 2023 வரையான காலப்பகுதியில் அரசாங்கத்தின் நோக்கங்கள் மற்றும் அணுகுமுறைக்கு ஏற்ப இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் கண்டுகொள்ளத்தக்க பொதுவான மற்றும் விசேட பண்புகள் சிலவற்றை காணமுடியும்.

*நல்லாட்சி அரசின் காலம்*

- விசேட பண்புகளுள் ஒன்று ஆசியரவை மையப்படுத்திய வெளிநாட்டுக் கொள்கையை முன்னெடுத்த முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் போன்றல்லாது மைத்திரிபால-ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் தனது வெளியுறவினைப் பேணுவதில் அணிசேராக் கொள்கை மற்றும் ஆசியா அடையாளத்தை தவிர்த்ததுடன் அவற்றுப் பதிலாக காரியவாத அணுகுமுறையைப் (pragmatism) பின்பற்றியது.

எடுத்துக்காட்டாக நல்லாட்சி அரசாங்கம் "எல்லோருடனும் நட்பு, யாருடனும் பகைமை இல்லை" எனும் கொள்கையினை முன்னிறுத்தி வெளியுறவைப் பேணிக் கொள்ள முயற்சித்தது.

- இத்தகைய காரியவாத அணுகுமுறையினைக் கொண்டு திசைமுகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையை பிரதிபலிப்பாக நல்லாட்சி அரசாங்கம் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்க காலத்தில் விரிசலுற்றிருந்த இந்தியாவுடனான இலங்கையின் உறவினை சீர்செய்து சீனா மற்றும் இந்தியாவுடனான உறவில் சமநிலையைப் பேணுவதில் கூடுதல் நாட்டம் காட்டியது.

உதாரணமாக, நல்லாட்சி அரசாங்கம் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கியதை போன்று இந்தியாவுடன கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில்(ETC) கைச்சாத்திட்டது.

- அதேபோன்று நல்லாட்சி அரசாங்கம் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் (சீனாவில்) "தங்கியிருத்தல் பொருளாதார" அணுகுமுறைக்கு பதிலாக "பொருளாதார இராஜதந்திரம்" அணுகுமுறையினைப் பின்பற்றி இலங்கையை இந்து சமுத்திரத்தின் "வர்த்தக, போக்குவரத்து மற்றும் விநியோக மையமாக" மாற்றும் திட்டத்தை முன்மொழிந்தது. இப் புதிய அணுகுமுறை பிராந்திய மற்றும் உலக வல்லரசுகள் அத்துடன் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் புறக்கணிப்புக்குள்ளான இலங்கையின் பாரம்பரிய அபிவிருத்தி பங்காளிகளுடன் பொருளாதார உறவினை பலப்படுத்துவதை நோக்கமாக கொண்டிருந்தது.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- இதன் ஒரு அங்கமாக நல்லாட்சி அரசாங்கம் நாட்டின் போருக்குப் பிந்திய கரிசனைக்குரிய வியங்கள் குறித்து கவனம் செலுத்துவதற்கு அவசியமான பற்றுறுதியை விருப்புடன் ஏற்றுக் கொண்டது.

எடுத்துக்காட்டாக ஐரோப்பிய ஒன்றியத்தினால் இடைநிறுத்தப்பட்ட GSP+ வரிச் சலுகையை அவ்வமைப்புடன் நெருங்கிய உறவினை பேணி மீளவும் 2017 இல் பெற்றுக் கொண்டது.

- அதேபோன்று முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் போன்றல்லாது நல்லாட்சி அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துடன் நெருங்கியதும் சுமூகமிக்கதுமான உறவை பேண முற்பட்டது.

**கோட்டாபாய ராஜபக்ஷவின் பொதுஜன முன்னணியின் (SLPP)ஆட்சிக் காலம்**

- SLPP ஆட்சியின் போது குறிப்பாக சீனா மற்றும் இந்தியாவுடனான இலங்கையின் உறவு சிறப்பிடம் பெறுகின்றது. அதாவது SLPP அரசாங்கம் சீனா மற்றும் இந்தியாவுடன் இலங்கையின் உறவை பலப்படுத்துவதில் அதிக முனைப்பு காட்டியது. எந்தளவுக்கெனில் ஆசியாவின் இவ்விரு வல்வரசுகளுக்கிடையில் "சமதூர சமநிலை" உறவினைப் பேணி நடுநிலைமை வகிக்க முயற்சித்தது.
- இவ் ஆட்சியின் போது கண்டுகொள்ளத்தக்க மற்றுமொரு முக்கிய வெளிநாட்டுக் கொள்கையின் பண்பு SAARC மற்றும் BIMSTEC அமைப்பு நாடுகளுடனான இலங்கையின் பொருளாதார மற்றும் வர்த்தக உறவினை பலப்படுத்த முயற்சிகள் இடம்பெற்றன.

உதாரணமாக, "பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர்" எனும் புதிய பதவி நியமனம் இந்நோக்கம் கருதி மேற்கொள்ளப்பட்டது.

- முன்னைய நல்லாட்சி அரசாங்கத்தின் கொள்கைக்கு மாற்றமாக SLPP அரசாங்கம் மேற்கு நாடுகள் மற்றும் அந்நாடுகளின் செல்வாக்கு ஓங்கி காணப்படும் பல்தரப்பு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் ஈடுபடுவதிலிருந்து விலகியிருந்தது. இதன் ஒரு அங்கமாக மேற்குலகிலுள்ள இலங்கையின் பாரம்பரிய அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் ஜப்பானுடன் இவ்வரசு வரையறுக்கப்பட்ட ஈடுபாட்டை காட்டியது.

உதாரணமாக, ஜப்பானிய அரசின் இலகு ரயில் திட்டம்(LRT) மற்றும் அவ்வரசுடன் கைச்சாத்திட்ட ECT ஒப்பந்தம் ஆகியவற்றை கோட்டாபாய அரசு இரத்துச் செய்தது. அதேபோன்று UNHRC இல் முன்னைய நல்லாட்சி அரசு ஏற்றுக் கொண்ட பொறுப்புக்கூறல் உறுதிமொழியிலிருந்து பின்வாங்கியது. அத்துடன் அமெரிக்காவின் MCC திட்டத்தில் கையெழுத்திட மறுப்புத் தெரிவித்தது.

- இருப்பினும் ஒரு கட்டத்தில் சீனா மற்றும் இந்தியாவுடனான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் சமநிலைத்தன்மையில் தளம்பல் ஏற்பட்டது. சீனாவுக்கு அனுகூலமான வகையில் பல அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலான தீர்மானங்களை SLPP அரசு மேற்கொண்டது.

உதாரணமாக, 2021இல் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்று உடன்படிக்கையை சீனாவுடன் கைச்சாத்திட்டது. அத்துடன் 2022ஆம் ஆண்டு 12 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டத்தை சீனாவுக்கு வழங்கியது. இவை அனைத்தும்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

இவ்வரசின் ஆரம்ப நிலைப்பாடான ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கியமையை மீள்பரிசீலனைக்குட்படுத்துவதாக கூறிவந்த ஒரு நிலைமையில் நடந்தேறின.

- ஆயினும், பொருளாதார நெருக்கடி சீனா நோக்கி நகரவிருந்த கோட்டபாய அரசின் வெளிநாட்டுக் கொள்கையை திசைதிருப்பி இலங்கையை இந்தியாவின் செல்வாக்கு வலயத்துக்குள் கொண்டு வந்தது.

**ரணில் விக்கிரமசிங்கவின் SLPP ஆட்சிக் காலம்**

- இவ் ஆட்சியின் போது இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை 2022இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் அதன் முயற்சிகளின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது.
- ரணில் விக்கிரமசிங்க அரசின் பொருளாதாரத்துக்கு முன்னுரிமை எனும் நிலைப்பாடு பொருளாதாரத்தை திசைமுகப்படுத்திய வெளிநாட்டுக் கொள்கையை பின்பற்றுவதற்கு இட்டுச் சென்றது.

- இதன் ஒரு அங்கமாக சர்வதேச ஆதரவை உச்சப்படுத்தி நெருக்கடியிலுள்ள பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் "பல் அணிசேர்வு" வெளிநாட்டுக் கொள்கையை பின்பற்ற முயற்சித்தது.

எடுத்துக்காட்டாக, 2023இல் இடம்பெற்ற "மூன்றாவது இந்தோ-பசுபிக் தீவு நாடுகளின் வருடாந்த உரையாடல்" இன் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் "நிச்சயமாக, நான் சீனா சார்பானவனும் இல்லை இந்தியா சார்பானவனும் இல்லை. நான் இலங்கை சார்பானவன். இன்று எமது முன்னுரிமைக்குரிய விடயங்கள் பொருளாளதாரம், சமூகம் மற்றும் சூழல் சார்ந்தவையாகும். இவ் இலக்குகளை அடைய எமக்கு உதவக்கூடிய அரசு அல்லது அரசு சாராத எந்தவொரு தரப்புடனும் இணைந்து பணியாற்ற நாம் தயாராக உள்ளோம்" எனும் கூற்றை குறிப்பிட முடியும்.

- இது தவிர காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை கட்டுப்படுத்தல் போன்ற உலகளாவிய பிரச்சினைகளில் இலங்கை ஆர்வம் மற்றும் ஈடுபாடு காட்டுதல் என்பதும் இக்காலகட்டத்தின் போது அதன் வெளிநாட்டுக் கொள்கையின் ஓர் அங்கமாக மாறியது. இது தொடர்பில் இலங்கையின் முன் முயற்சிகளுள் ஒன்றாக COP 28 மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் "சர்வதேச காலநிலை மாற்ற பல்கலைக்கழகம்" முன்மொழிவு குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

- 2015 பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் விசேட பண்புகளுள் ஒன்றாக பாரம்பரிய கருத்தியல் மற்றும் புவியியல் சார் அடையாளத்துடன் கூடிய திசைமுகப்படுத்தலின் தவிர்ப்பு முக்கியம் பெறுகிறது.
- மற்றொரு விசேட பண்பு இக்கால கட்டத்தினுள் மூன்று அரசாங்கங்களும் சீனா மற்றும் இந்தியாவுடன் பலமான மற்றும் சமநிலைத் தன்மைமிக்க உறவினை பேண முயற்சித்தன.
- பொருளாதார இராஜதந்திரம் இலங்கை எதிர்நோக்கிய பொருளாதார அழுத்தத்துக்கு தீர்வுகாண



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

பிராந்திய மற்றும் உலக வல்லரசுகளுடன் ஈடுபாடு காட்டுவதற்கான உபாயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- மொத்தத்தில் 2015 பின்னரான கண்டுகொள்ளத்தக்க பண்புகள் இலங்கை சீரான வெளிநாட்டுக் கொள்கையை பின்பற்றவில்லை என்பதையும் அது(வெளிநாட்டுக் கொள்கை) பொருளாதார நிரப்பந்தம் மற்றும் ஆட்சியிலுள்ள அரசின் அல்லது தலைமைத்துவத்தின் அரசியல் முன்னுரிமைகளைப் பொறுத்து மாறுபட்டு வந்துள்ளது.

**வினா இல: 10**

**10. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டுக்கு சிறுகுறிப்புகள் எழுதுக**

**(i). அரசுக்குள்ளான மோதலுக்கான காரணிகள்** **(10 புள்ளிகள்)**

நோக்கம்:

அரசுக்குள்ளான மோதலுக்கான காரணிகளை அடையாளங் கண்டு அவற்றை விளக்கும் பரீட்சாத்தியின் திறனை பரிசோதித்தல்.

மோதல் பற்றிய வகைப்பாட்டிற்கிணங்க மோதலை அரசுகளுக்கிடையிலான மோதல், அரசுக்குள்ளான மோதல் மற்றும் அரசு நிர்மாண மோதல் என மூன்றாக வகைப்படுத்த முடியும். அரசுக்குள்ளான மோதல் என்பது அரசின் ஆட்புலப் பிரதேசத்தினுள் இடம்பெறும் மோதலைக் குறிக்கின்றது.

அரசுக்குள்ளான மோதல்கள் தோற்றம் பெறுவதில் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன;

i. கட்டமைப்புசார்ந்த காரணிகள்

அ. பல்லின சமூகமொன்றில் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த அரசு தவறுதல் அல்லது முடியாமல் போதல்.

ஆ. பல் இன, மத மற்றும் கலாசார சமூகங்களில் இன மற்றும் சமூக குழுக்களின் மனத்தாங்கல்கள் குறித்து கவனம் செலுத்த தவறுதல்.

ii. சமூக-பொருளாதார காரணிகள்

அ. சமூக குழுக்கள் மற்றும் இனக்குழுக்கள் தொடர்ச்சியாக சமத்துவமின்மைக்கு உள்ளாகுதல்

ஆ. சமூக-பொருளாதார பரப்பில் சமூக மற்றும் இன குழுக்கள் தொடர்ச்சியான பாரபட்சத்துக்கும் ஓரங்கட்டப்படலுக்கும் உள்ளாதல்.

இ. அரசாங்கம் இன மற்றும் சமூக குழுக்களின் மனக்குறைகளை தொடர்ச்சியான புறக்கணித்தல்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. அரசியல் காரணிகள்

அ. சமூக அல்லது இனக் குழுக்களை புறந்தள்ளும் அல்லது ஓரங்கட்டும் பாகுபாடு காட்டும் அரச நிறுவனங்கள்

ஆ. புறந்தள்ளும் அரசியல் கருத்தியல்கள்

இ. வேறுபட்ட சமூக மற்றும் இனக் குழுக்களிடையேயான தீவிர போட்டி மற்றும் ~~முரண்நகை~~ முரண்பாடு

ஈ. அதிகார மோகம் கொண்ட அரசியல் தலைவர்கள்

iv. கலாசார காரணிகள்

அ. சிறுபான்மை இனங்களின் கலாசாரம் மற்றும் மொழி அத்துடன் மதத்தை அங்கீகரிக்காமை மற்றும் அவற்றுக்கெதிரான பாரபட்சம காட்டலும்.

ஆ. பரஸ்பரம் ஒன்றையொன்று புறந்தள்ளும் கருத்தியல்கள்

மொத்தத்தில் அரசுக்குள்ளான மோதல்களுக்கான பொதுவான காரணியாக அரசியல் அதிகாரம் காணப்படுகிறது.

**(ii). பொதுக் கொள்கைக்கும் பணிக்குழுவுக்கும்(பணியகவமைப்பு) இடையிலான தொடர்பு**

**(10 புள்ளிகள்)**

பணியகவமைப்பு என்ற சொற்பதமானது அரச அதிகாரிகளால் இடம்பெறும் ஆட்சி என்பதனை குறித்து நிற்கின்றது. பொதுவில் பணியகவமைப்பு என்பது அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல்படுத்துகின்ற செயற்பாட்டினை முன்னெடுக்கும் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரைக் கொண்ட உத்தியோகத்தர்களை குறித்து நிற்கின்றது. அரசாங்கத்தின் நிறைவேற்று துறையின் நிரந்தர நிர்வாகமே பணியகவமைப்பாகும். அரசியல் நிறைவேற்றுத்துறையில் இருந்து பணியகவமைப்பினை பிரித்துக்காட்டுவது அரசியல் நடுநிலைத்தன்மை, நிரந்தர பதவிக்காலம் மற்றும் தொழில் சார் பயிற்சி, தகமை மற்றும் அனுபவம் என்பனவாகும். அரசியல் நிறைவேற்றுத்துறையினால் தீர்மானிக்கப்படுகின்ற கொள்கைகள் மற்றும் சட்டங்களுக்கு ஏற்ப அரச நிர்வாகத்தினை பணியகவமைப்பு கொண்டு நடாத்துகின்றது. பணியகவமைப்பு அரசியல் நிறைவேற்று துறையின் தலைமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டலின் கீழ் செயற்படுகின்றது.

மறுபுறமாக, பொதுக்கொள்கை என்பது நிச்சயிக்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் மேற்கொள்கின்ற செயற்பாடுகள் அல்லது தீர்மானங்களை குறித்து நிற்கின்றது. அரசாங்கம் அடைய முற்படும் நோக்கங்கள் பொதுக்கொள்ளைகளாக உருவாக்கப்படும். மிக முக்கியமாக அரசாங்கத்திற்கு கொள்கைகளை அமுல்படுத்துகின்ற செயற்பாட்டினை பணியகவமைப்பு முன்னெடுப்பதனால் ஆளுகை செயன்முறையில் அது முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. அரசாங்கத்தின் நோக்கங்கள் கொள்கை அமுலாக்கத்தின் ஊடாக அடைந்து கொள்ளப்பட்டுள்ளது என்பதனை பணியகவமைப்பு உறுதி செய்ய வேண்டும்.

சமூகத்தில் உருவாக்கப்பட்ட மிகவும் மேம்பட்ட மனித ஒழுங்கமைப்பாக பணியகவமைப்பினை மெக்ஸ் வெபர் குறிப்பிடுகின்றார். அரசாங்கம் கூட்டு செயற்பாடுகளை முன்னெடுக்கவும் பகுத்தறிவு ரீதியாக செயற்படவும் பணியகவமைப்பு அவசியம் என வெபர் வாதிடுகின்றார்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

தற்கால உலகில் எழுச்சியடைந்துள்ள புதிய பிரச்சினைகளை (காலநிலை மாற்றம் / புவி வெப்பமடைதல் / புலம்பெயர்வு) வினைத்திறன் மிக்க வகையில் கையாள்வதற்கு பணியகவமைப்பு பெரிதும் அவசியமாகும்.

பணியகவமைப்பு அரசாங்கத்தின் நிரந்தர அங்கமாக இருப்பதுடன், பொதுக்கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு அவசியமான நிபுணத்துவம், தகைமை மற்றும் அனுபவம் கொண்ட ஆளணியினரையும் கொண்டுள்ளது.

நவீன ஜனநாயக நாடுகளில் பணியகவமைப்பு கொள்கை உருவாக்கத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. குறிப்பாக கொள்கை உருவாக்கத்திற்கு அவசியமான தரவுகள், தகவல்கள்,

புள்ளிவிபரங்கள், ஆதாரங்களை மற்றும் தொழிநுட்ப உதவிகளையும் வழங்கி வருகின்றது.

வெபர், பணியகவமைப்பு தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது அல்லது தீர்மானங்களை எடுக்கும் போது, அவற்றை நடைமுறைப்படுத்தும் போது பின்வரும் பண்புகளை கொண்டிருக்க வேண்டும் என்றார்.

- தொழில் சிறப்பு தேர்ச்சி/ தொழில்சார் சிறப்பு தேர்ச்சி
- ஒழுங்கமைப்பில் தொழில் பிரிப்பினை தொழில் தேர்ச்சி அடிப்படையில் மேற்கொள்ளுதல்
- இறுக்கமான ஒழுங்கு விதிகள் காணப்படுதல்
- வழங்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்ற அவசியமான தொழில் தேர்ச்சி
- தீர்மானம் எடுத்தல் மற்றும் அமுலாக்கத்தில் ஆட்சாராமை
- எழுத்து வடிவிலான ஆவண பராமரிப்பு
- படிநிலையமைப்பின் அடிப்படையில் அதிகாரத்துவத்தினை பங்கீடு செய்தல் (மேலிருந்து கீழ்)
- அரசியல் நிறைவேற்றுத்துறைக்கு விசுவாசமாக இருக்கும் அதேவேளை அரசியல் நடுநிலைத்தன்மையினைப் பின்பற்ற வேண்டும்.

### (iii). இலங்கையின் அரசியல் கட்சி முறையின் தற்போதைய போக்குகள்

- இலங்கையின், அரசியல் கட்சி முறையின் தற்போதைய போக்குகளில் முக்கியமான விடயம் இரு கூட்டு கட்சி முறை வீழ்ச்சியடைந்துள்ளமை.
- அரசியல் கட்சி முறை ஸ்திரமற்றதாக காணப்படுதல்.
- சிறிய கட்சிகளின் அதிகரிப்பு.
- கூட்டணி கட்சிகள் அண்மையத் தேர்தலில் நிராகரிக்கப்பட்டமை.
- கூட்டணி அரசியல் அரசியல் கட்சிகளை துருவமயப்படுத்தியுள்ளன.
- தற்போது கூட்டணி சேர்வதற்கு அரசியல் கருத்தியல் என்ற காரணி செல்வாக்குச் செலுத்துவதில்லை.
- கூட்டணி அமைப்பது அரசியல் சந்தர்ப்பவாத பின்புலத்தில் இடம்பெறுகின்றது.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் SLFP கட்சி என்பவற்றின் அரசியல் மற்றும் சமூக ஆதரவுத்தளம் தீவிரமாக வீழ்ச்சியடைந்துள்ளது.
- கட்சி விசுவாசம் தேர்தல் அரசியலில் குறைவடைந்துள்ளது. இதன் வெளிப்பாட்டினை அடிமட்ட தேர்தல் அரசியலில் அவதானிக்க முடியும்.
- வாக்களார் -கட்சி உறவு தீவிரமாக வீழ்ச்சியடைந்துள்ளது.
- இனத்துவ மற்றும் மத அரசியல் கட்சிகளின் தேர்தல் பலம் வீழ்ச்சியடைந்துள்ளது.

**(iv). இலங்கையின் விகிதாசார தேர்தல் முறைக்கு எதிரான விமர்சனங்கள்**

தேர்தல் மாவட்டங்கள் புவியியல் ரீதியாக பெரியனவாக காணப்படுகின்றன. அவை அதிகளவிலான சனத்தொகையினைக் கொண்டுள்ளன. இதனால் வாக்காளர்- பிரதிநிதிகளுக்கிடையிலான உறவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் மாவட்டங்கள் அளவில் பெரிதாக இருப்பதினால் எல்லா வேட்பாளர்களுக்கும் தேர்தல் அரசியலில் சமமாக ஈடுபடுவதற்கான வாய்ப்பு மட்டுப்படுத்தப்படுகின்றது. குறிப்பாக பொருளாதார ரீதியாக பலம் படைத்தவர்களுக்கு இது நன்மையளிப்பதாகவும் ஏனையோருக்கு பாதகமாகவும் அமைகின்றது.

இடைத்தேர்தல் இடம் பெறாமை அரசாங்கம் குறித்த மக்களின் பொதுஜன அபிப்பிராயத்தினை பெறுவதற்கான வாய்ப்பினை இல்லாத செய்கின்றது.

போனஸ் ஆசனம் வெற்றி பெற்ற கட்சிகளுக்கு வழங்கப்படுவது உண்மையான விகிதாசாரத்தை பாதிப்பதுடன் சிறிய கட்சிகளையும் பாதிக்கின்றது.

தேசியப்பட்டியல் ஆசனம் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் ~~13%~~ 11% காணப்படுகின்றது. இது விகிதாசார தத்துவத்திற்கு முரணாக இருப்பதுடன் பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்படாமல் பாராளுமன்றத்துக்குள் வருவதனை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்ற விவாதத்திற்கு இட்டுச் சென்றுள்ளது.

தேர்தல் வன்முறை விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் நேரடி விளைவு இல்லை என்றாலும் விருப்பு வாக்கு முறை தேர்தல் வன்முறையினை தூண்டுவதாக அமைகின்றது.

(*) 2016 January 16 commition - ஜனாதிபதி ஆணைக்கு - நியமிப்பு | 2500 பேர், 800 email, 105 Fax, 700 post [illegible]

2016 may 10 - 20 விடயங்கள் தொடர்பான அறிக்கை சமர்ப்பு - இலங்கை தேர்தல் தொடர்பான குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டது.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**(v). சர்வதேச அரசியலில் அரசு சார்பற்ற செயற்பாட்டாளர்களின் வகிபங்கு**

**(10 புள்ளிகள்)**

நோக்கம் :

சர்வதேச அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு அரசு சாரா செயற்பாட்டாளர்களின் வகிபாகத்தை விளக்கும் பரீட்சாத்தியின் திறனை பரிசோதித்தல்.

சமகால சர்வதேச அரசியலில் (i) தனிநபர்கள் - அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் (ii) முறைசாரா குழுக்கள் - சமூக குழுக்கள் மற்றும் பயங்கரவாத குழுக்கள் (iii) நிறுவனங்கள் - அரசசார்பற்ற நிறுவனங்கள் (NGOs) மற்றும் பல்தேசிய கூட்டுத்தாபனங்கள MNCs போன்ற அரசல்லா செயற்பாட்பாளர்கள் தேசிய அரசாங்கத்தின் எல்லைகளைத்தாண்டி பொருளாதார, அரசியல் மற்றும் சமூக ஊடாட்ட முறையில் தாக்கம் செலுத்தும் அவற்றின் இயலுமை காரணமாக அதிகம் முக்கியம் பெறுகின்றன.

அரசல்லா செயற்பாட்டாளர்களின் வகிபாகம்

- அதிகாரம் மற்றும் மாற்றத்தின் முகவர்கள்: அரசல்லா செயற்பாட்டாளர்கள் ஒன்றில் அவற்றுக்கு வலுச் சேர்ப்பதன் மூலம் அன்றேல் அவற்றை சவாலுக்குட்படுத்துவதன் மூலம் அரசுகளின் வெளிநாட்டுக் கொள்கையின் மீது செல்வாக்குச் செலுத்தி உலகளாவிய கொள்கைகள் மற்றும் பொதுசன அபிப்பிராயத்தை உருவமைக்கின்றன. உதாரணமாக, மைக்ரோசொப்ற் நிறுவனம் அரசின் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கொள்கைகளில் செல்வாக்குச் செலுத்துகிறது.
- கூடவே பல்தேசிய கூட்டுத்தாபனங்கள்(MNCs) குறிப்பிடத்தக்களவு உலக சந்தை மற்றும் தொழில்வாய்ப்பின் போக்குகளில் தாக்கம் செலுத்தி பொருளாதார கொள்கைகள் மற்றும் புத்தாக்கத்துக்கு இட்டுச் செல்கின்றன.
- சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துபவர்கள்: NGOக்கள் சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் முக்கிய வகிபாத்தைக் கொண்டுள்ள அதேவேளை சர்வதேச பயங்கரவாத குழுக்கள் போன்ற முறைசாரா செயற்பாட்டாளர்கள் பாதுகாப்பான உலகை நோக்கி அரசுகள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களை(IGOs) ஒத்துழைப்புடன் செயலாற்ற தூண்டுகின்றன. உதாரணமாக, 9/11 பின்னரான அரசுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பைக் குறிப்பிட முடியும்.
- உலகளாவிய பொதுப் பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குனர்கள்: குறிப்பிட்ட சில NGOக்கள் சூழல் பாதுகாப்பு போராட்டத்தில் மிகுந்த தீவிரத்துடன் செயற்பட்டுவருகின்றன என்பதுடன் தாக்கரமானவையாகவும் உள்ளன. உதாரணமாக, பசுமை அமைதி இயக்கம்
- மனிதாபிமான உதவி வழங்குனர்கள் : மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான பரப்புகளில் செயற்படும் NGOக்கள் அரசுகளுக்கு மேலதிகமாகவும் சில சந்தர்ப்பங்களில் அரசுகளை விடவும் கூடுதலான மனிதாபிமான உதவிகளை வழங்குகின்றன. உதாரணமாக ICRC.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- ஆதரவு பிரச்சாரம் மற்றும் சட்டவாக்க பரப்புரை: குறிப்பாக ~~பேழுக்கள்~~ [பரப்புரை குழுக்கள்] நிபுணத்துவ ஆலோசனை மற்றும் பொதுசன அபிப்பிராயத்தை வழங்குவதனூடாக அரசாங்க மற்றும் அரசுசார்பு நிறுவனங்களின் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அத்துடன் அவை மனித உரிமைகள் பரப்பில் நெறிமுறைகள் மற்றும் நியமங்களை உருவாக்குவதிலும் பங்களிப்பு வழங்குகின்றன.

- உலக அரசாங்கத்தின் பங்குபற்றுனர் : அரசல்லா செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகள் மற்றும் முயற்சிகள் உலக அரசாங்கத்தில் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இது உலக அரசாங்கத்தினை தனியொரு செயற்பாட்டாளர் என்பதிலிருந்து பல் செயற்பாட்டாளராக மாற்றியுள்ளது.

- மத்தியஸ்த வகிபாகம் : அரசல்லா செயற்பாட்டாளர்கள் சிலவேளைகளில் மோதல் தீர்விலும் பங்கேற்கின்றனர். உதாரணமாக, ஜிம்மி கார்ட்டர் மற்றும் டெஸ்மன்ட் டூடு போன்ற முறையே அரசியல் மற்றும் ஆன்மிகத் தலைவர்கள் அரசுகளுக்கிடையிலான மற்றும் அரசுக்குள்ளான மோதல்களில் மத்தியஸ்தம் செய்துள்ளனர்.

குறிப்பு: மேலுள்ள அரசல்லா செயற்பாட்டாளர்களின் வகிபாகம் தவிர இதர வகிபாகம் பற்றியும் பரீட்சார்த்தி குறிப்பிட இடமுண்டு. அவற்றின் பொருத்தப்பாட்டை கருத்திற்கொண்டு புள்ளிகள் வழங்குக.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/